
www.tamilarangam.net

SUVADUKAL

# சுவடுகள்

A Tamil Monthly from Norway



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை சுதந்திரம் அடைந்து 45 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் சுதந்திரம் என்பது பெயரளவில் மாத்திரமே நடைமுறையில் உள்ளது. அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள பல தரப்பினரும் மனித உரிமைகளை மீறிக்கொண்டே இருக்கிறார்கள். இவ்வாறு செயற்படுவோரால் தேசமும் மக்களும் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளனர்.

இந்த மனித உரிமை மீறல்களில் இலங்கை அரசு, இந்திய அரசு (இந்தியாவில் உள்ள இலங்கையர்மீது), ஜேவிபியினர், விடுதலைப் புலிகள், முஸ்லிம் ஊர்காவற் படையினர், ஈபிஆர்எல்எஃப், மற்றும் கொழும்பு இயக்கங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருக்கின்றன, ஈடுபட்டும் வருகின்றன. மாற்றுக் கருத்து உடையோரைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை புரியப்படும் கொடுமை இன்னும் தொடர்கிறது. இது தொடர்கதையாகவே உள்ளது.

இந்தத் துயர்நிலை நீங்க உழைப்பது அனைத்து மக்களதும் கடமையாகும். இதில் எவரும் எக்காரணத்தைக் காட்டியும் பின்னிற்கக்கூடாது, முடியாது.

சகல அரசியற் கைதிகளும் எதுவித நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், சகல தரப்பு மனித உரிமை மீறல்களும் நிபந்தனையின்றி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் சுவடுகள் அனைத்துத் தரப்பினரையும் வேண்டுகிறது. தாய்நாட்டின் துயர்நீங்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இந்த வேண்டுகோளை விடுக்க வேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகிறது●



www.tamilarangam.net

93 ஜூலை இது.
83 ஜூலை இனப்படுகொலை நடந்து முடிந்து பத்து வருடங்கள். தமிழ் மக்களின் மேலான படுகொலைகள் காலத்துக்குக் காலம் 58,77,81 என நிகழ்த்தப்பட்டு வந்தாலும் 83 படுகொலைகள் எல்லாவற்றிற்கும் மேலாகவும் உச்சமானதாகவும் இருந்தது.

வெலிக்கடைச் சிறையில் ஜூலை 25ம் திகதி 35 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 27ம் திகதி மேலும் 18 பேர் கொல்லப்பட்டனர். நாடெங்கிலும் ஆயிரக் கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அகதிகளாக்கப்பட்டனர்.

93 இது. இற்றைவரைக்கும் தமிழ் மக்களுக்கான தீர்வெதுவும் முன் வைக்கப்படவில்லை. ஆனால் அவ்வப்போது இனப்படுகொலைகளுக்கு மட்டும் குறைவில்லை.

தீர்வுக்கான முன்முயற்சிகள் என்ற பெயரில் 83ல் உருவாக்கப்பட்ட வட்டமேசை மாநாட்டிலிருந்து 93 இன் தெரிவுக் குழுவரை எதுவும் தீர்வெதுவுமின்றிய பம்மாத்துக்களாகவே போயிற்று.

தமிழ் மக்கள் இன்னமும் நாயிற் கடையாய் ....



www.tamilarangam.net

# நோர்வே மொழியில் ராமாயணம்


## Sangen om Rama

**கோகுலன்**

எமக்கெல்லாம் நன்கு அறிமுகமான ராமாயணத்தை அண்மையில் நோர்வேஜிய மொழியில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. தூர் ஓகெ பிறிங்ஸ்வார் (Tor Åge bringsvŒrd) இந்த மேடையேற்றத்திற்கான பிரதியை எழுதியிருந்தார். குஸ்புவிடம் இந்த நாடகம் பார்ப்பதற்கு 'இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி' அனுமதி பெற்று இருவரும் நாடகத்தின் இறுதிநாள், இறுதிக் காட்சிக்குச் சென்றோம். - குஸ்பு என்று எனது மனைவி 'குசாலாட்சி'யைச் செல்லமாக அழைப்பேன்.

குஸ்புவுடன் நாடகம் பார்க்கப் போனால் பேய் அறுவைதான். முழு நாடகமும் காட்டுவார்களோ, இல்லாட்டிக் கொஞ்சத்தைக் காட்டி ஏமாத்திப் போடுவாங்களோ? எத்தினை பேர் நடிக்கிறார்கள், ஒரு ஐம்பது பேர் வருமே? எனப் பல கேள்விகள்.

குஸ்புவை ஒருமாதிரிச் சமாளித்து நாடக அரங்கிற்குள் போனபோதுதான் தெரிந்தது, செல்வி சிவப்பிரியா பாலசிங்கத்தின் பரதநாட்டியமும் இடம்பெறும் என்பது. குஸ்புவிற்குப் பரதநாட்டியம் என்றால் நல்ல விருப்பம். குஸ்பு பருமனாக இருந்தபடியால், ஆசையிருந்தும் சிறுவயதுடன் நடனத்தை முடித்து, பின்பு



சீதையைச் சந்தித்தபின், அரக்கியுடன் அனுமான்

ராவணனை வென்று, சீதையைச் சிறைமீட்பது வரை தொண்ணூறு நிமிடங்களிலேயே சிறப்பாகச் சித்தரிக்கப்

நடிகர்களில் மூவர் பெண்கள், இருவர் ஆண்கள். இவர்கள் தொய்வோ, இடைவெளியோ தெரியாமல் ஒரு நல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னைத் திருமணம் செய்தது வேறு கதை. குஸ்புவின் பருமனுக்கு ஏற்ற கதிரைகள் முன்பக்கத்தில் இருந்ததால் நாம் இரண்டாவது வரிசையில் இருந்து நாடகம் பார்த்தோம். எட்டிலிருத்து எண்பது வயது வரையிலான நோர்வேஜியர்களால் மண்டபம் நிறைந்திருந்தது.

செல்வி சிவப்பிரியாவின் நடனம் முதலில் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகியது. சிறந்த ஒலி - ஒளி அமைப்பில் பிள்ளையாருக்கு வணக்கம் செலுத்திய நடனம் கண்ணைவிட்டு மறையவில்லை. ஐந்து வயதிலிருந்து பரதநாட்டியம் ஆடிவரும் சிவப்பிரியாவின் சிறப்புப் பதின்மூன்றுவயதில் தெரிந்தது. மேலும் அவர் வளர்ச்சி அடையவேண்டும் என்று என்னைப் போலவே குஸ்புவும் பாராட்டினாள்.

எளிதான மேடை அமைப்பில் சிறந்த ஒளி - ஒலி அமைப்புடன் நாடகம் ஆரமபித்தது. தசரதன் விஷ்ணுவிடம் இருந்து பிள்ளைவரம் பெறுவதும், பின்பு பிள்ளை பிறக்கும் காட்சியும் - அதாவது, ஆரம்பமே, நான் குஸ்பு உட்பட அனைவரையும் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தவண்ணம் பார்க்கவைத்தது.

பிள்ளைகள் வளர்ந்துவருதல், வில்வளைத்தல், மணம் முடித்தல், கூனியின் சூழ்ச்சி இப்படி... ராமா அணைகட்டி பட்டது. நாடகம் அளித்த திருப்திக்கு மண்டபத்தை நிறைத்த கரகோஷத்தைச் சாட்சியாகச் சொல்லலாம்.

இந்த நாடகத்தை நோர்வேஜிய மொழியில் தயாரிக்க முன்பே, நாடகம் தொடர்பான சில கலைஞர்கள் இந்தக் கதை நிகழ்ந்ததாகக் கூறப்படும் தென்னாசியப் பிராந்தியமான இலங்கைக்கும், இந்தியாவுக்கும் பயணம் செய்திருந்தனர். அங்கு வாங்கிய உடைகளே நாடகத்தில் பயன்படுத்தப் பட்டன.

நாடகத்தைப் பற்றிய ஒரு சிறு கைநூல் வாங்கியிருந்தேன், சுவடுகளுக்கு ஒரு விமர்சனக் குறிப்பு எழுதும் நோக்கில். அதை விரித்துப் பார்த்த குஸ்புவின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. ஐந்து நடிகர்கள்தான் முழு நாடகத்தின் 29 பாத்திரங்களையும் ஏற்று நடித்திருந்தனர். ஒருவர் விஷ்ணு, ராமன், சூர்ப்பனகை, யமன் ஆகிய பாத்திரங்களை ஏற்று நடித்திருந்தார். இதேபோல் ஏனையோரும் பொருத்தமான முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களை ஏற்று நடித்திருந்தனர். பல பாத்திரங்களை ஒருவர் ஏற்றாலும், மிக வேகமாகப் பாத்திரங்களை மாற்றி, ஒழுங்கமைக்கப்பட்ட உடைமாற்றங்களுடன் நடித்தனர். நாடகத்தைத் தந்த இவர்களது ஆற்றலை, அதிகம் நாடகம் பாராத குஸ்புவே 'வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாடகம்' எனப் பாராட்டியது மட்டுமல்ல, நோர்வேஜியர் மத்தியில் எனக்கு முத்தம் தந்தது வேறு.

நாடகக் குழுவால் வெளியிடப்பட்ட புத்தகத்தில் திரைமறைவில், நாடக உருவாக்கத்தில் பங்கேற்ற பத்துப் பேரது படங்களும் வெளியிடப்பட்டு, அவர்களைப் பற்றிய விவரங்களும் வழங்கப் பட்டிருந்தன. அத்துடன், Scenografiயில் ஈடுபட்ட இலங்கையரான ஹே மாலிக்குப் (He' Marli) பிரத்தியேக நன்றி

தெரிவித்திருந்தனர், இலங்கை விஜய உதவிக்காகவும்.

ஆனால் இந் நாடகத்தை நான், குஸ்பு உட்பட எட்டுத் தமிழர்களே பார்த்தோம். 'கட்டுக்கதைகளின் தாய்நாடு' (Eventyrs mor) என்று அழைக்கப்படும் இந்தியாவில் எழுதப்பட்ட கதை என முகவுரையில் எழுதப்பட்டிருந்தது.

குஸ்பு, தனது சிநேகிதி மீனா (மீனாட்சி) சொன்னதாகச் சொன்னாள், அவளது கணவன் சொன்னவராம், நோர்வேயில் நாடகம் பார்க்கிறது வயதுபோனவர்கள்தான் என்று. சீதனம்

சேர்க்க இப்படியெல்லாம் நியாயப் படுத்தல்கள். வாழ்க தமிழினம்!

இந்த நோர்வேஜிய நாடகக் குழுவிடம் இருந்து தமிழர்கள் அறியவேண்டிய அனேக விடயங்கள் உள்ளன. ஒலி ஒளி அமைப்பு, நாடகப் பயிற்சி ஒழுங்குகள், நாடகத் தயாரிப்பிற்கான முன்னேற்பாடுகள், கடின உழைப்பு, அர்ப்பணிப்பு என்பன அவற்றிற் சில.



ஜனகன் சபையில், வில்லொடித்து மணமுடித்து

கோவில் கட்ட அல்லது கும்பாபிஷேக நிதிக்கென்று நாடகம் போட்டால் சிறுதொகை காசு கொடுத்து விசிலடிக்கும் எம்மவர்களைப் போலல்லாமல்,

கலைஞர்களது உழைப்பை மதித்து, பணம்கொடுத்துப் பார்க்கும் நோர்வேஜியப் பார்வையாளர்களிடம் இருந்தும் நாங்கள் கற்க நிறைய உண்டு.●

# பெருங்குடிமக்கள்

நோர்வேயில் எத்தொழில் புரிபவர்கள் அதிகம் குடிக்கிறார்கள் என்று தெரியுமா? உணவு பரிமாறும் வேலை செய்பவர்கள்தான் அதிகம் குடிக்கிறார்கள் என்று அண்மையில் நிகழ்ந்த கணிப்பீடு ஒன்று கூறுகிறது.

உணவு விடுதிகளில் வேலை செய்பவர்கள் அதிகளவில் மதுபானத்துடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கொண்டவர்கள் என்பதாலேயே அவர்கள் அதிகம் குடிப்பதாக அறியப்படுகிறது. இவர்களுக்கு அடுத்த இடத்தில் வருபவர்கள் செய்தியாளர்கள். கனரக வேலைகள் செய்பவர்கள் அடுத்த இடத்தில் பெரும்குடியர்களாக வருகிறார்கள்.

இதைவிட முன்பு நிகழ்த்தப்பட்ட ஆய்வு ஒன்றில் உணவு விடுதிகளில் பணிபுரிபவர்களே வாய், தொண்டை, உணவுக்குழாய் போன்றவற்றில் அதிகம் புற்றுநோயைக் கொண்டவர்கள் என அறியப் பட்டது.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்பளச்சாரியாருக்கு பகிரங்கக் கடிதம்!

அப்பளா!

சுடச்சுட உடன் பதிலெழுதியிருக்கிறாய். எனது கடிதத்தில் முன்னுக்குப் பின் கருத்து முரண்பாடு உள்ளதாக எழுதியிருக்கிறாய். எனக்கு அப்படித் தெரியவில்லை. சுட்டிக் காட்டினால் தொடர்கிறேன். திரும்பவும் சொல்வதாய்க் கோபிக்காதே. இலங்கையின் பொருளாதார அடித்தளத்தையும், அதன் அரசுகளையும் இல்லாதொழிப்பதே இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும். இன்றைய பாராளுமன்ற அரசியலுக்கோ அல்லது கைவசமுள்ள தமிழ்க்குழுக்களுக்கோ இவ்வாறான அவசியமும் விருப்பும் கிடையாது. இனவாதமே அனைத்துத் தரப்பினரதும் ஆகாரமாகிவிட்டபோது இது எவ்வாறு சாத்தியமாகும். நேர்மையும் திடமும் கொண்ட நீதியான 'மக்கள் யுத்தம்' ஒன்றால் மட்டுமே இது சாத்தியமாகும் என இன்றும் நம்பமுடிகிறது. 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு சாத்தியம் என்று நீயோ வலியுறுத்தி வருகிறாய். இது ஒற்றையாட்சிக்குள்ளா அல்லது 'ஒட்டுமொத்தப் புரட்சி'யின் வழியிலா என்று நீ இதுவரை தெளிவாகக் கூறிவிடவில்லை. இது சாத்தியம் இல்லை என நான் கூறியது ஆச்சரியம் தருவதாயும் சமகால அரசியலையும் யதார்த்தத்தையும் புரிய மறுப்பதாயும் தெரிவதாகக் குறை சுமத்தியிருக்கிறாய். ஒருவேளை அவ்வாறுகூட இருக்கலாம். தொடர்ந்து எழுது, விவாதிப்போம். இவை தொடர்பான சில கேள்விகளை உன்னிடமே விட்டுவிடுகிறேன்.

*1. இனமுரண்பாடு இன்று கூர்மை அடைந்துள்ளது. இந்நிலையில் இரு இனங்களையும் ஐக்கியப்படுத்திப் போராடும் அளவுக்கு, இனமுரண்பாட்டை இரண்டாம் பட்சமாக்கும் பொது முரண்பாடு ஒன்று உண்டா? அம்முரண்பாடு முதன்மையும் அடைந்துள்ளதா?*

*2. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் பேரக்கையே கட்டுப்படுத்தும் அளவிற்குப் பௌத்த பேரினவாதம் நிறுவனமாக்கப் பட்டுள்ளது. பலமான தேசிய மூலதனமோ பாட்டாளிகளோ வளர்ந்துவிடவில்லை. தனித்துவமான தேசிய விடுதலையோ பாட்டாளி*

## ராமனின் பதில்!

www.tamilarangam.net

*விடுதலையோ சாத்தியமற்ற நிலையில் இனப்பிரச்சனையை எவ்வகையான தீர்வுக்கு உட்படுத்த வேண்டும் என நீ நினைக்கிறாய்?*

*3. தமிழீழம் என்ற 20 வருடத்திற்கு மேலான ஆயுதப் போராட்டப் பாதையில் திடீரென தமிழீழமென்ற கோசத்தைக் கைவிட்டு, தமிழர் பக்கம் போராட்டத்தை முன்னெடுக்க முடியுமா?*

*4. எரித்திரியா எதியோப்பியா நாடுகளைப் போல மக்களது உன்னதமான வாழ்வினை மட்டுமே நேசிக்கும் விடுதலை அமைப்புகள் இருபுறமும் மக்கள் மத்தியில் பலமானதாக உள்ளனவா?*

அப்பளா! தீர்வு தொடர்பான உனது மூன்று நிபந்தனைகள் பற்றியும் அதன் உள்ளடக்கம் பற்றியும் அடுத்த மடல்களில் தொடர்கிறேன். இவைகள் நீண்ட விடயம் என்பது உனக்குத் தெரியாததல்ல. இம்மடலில் இடைக்காலத் தீர்வு பற்றியும் முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சனை பற்றியும் எழுதுகிறேன்.

எமது நாட்டில் மனித உரிமைகள் கண்மூடித்தனமாக மீறப்படுகின்றன. இனப்படுகொலையும் அரசியற் படுகொலையும் பிணங்களைக் குவித்தே வருகிறது. எந்தப் பக்கமும் 'யுத்ததர்மம்' கைவிடப்பட்ட நிலையில் யுத்தமோ தொடர்கிறது. பசி, பட்டினி, கொடிய நோய், சித்திரவதை, பகற்கொள்ளை என்றெல்லாம் மனிதனோடு விளையாடித் திரிபவை ஏராளம். யுத்தத்தில் களைத்துப்போய் 'சித்தப்பிரமை' பிடித்து அங்கலாய்த்துத் திரிகிறார்கள் மக்கள். இந்நிலையின் நீடிப்பு நிறுத்தப்பட்டே ஆகவேண்டும். இடைக்காலத் தீர்வு ஒன்று அவசியம்தான். எவ்வகையான தீர்வு என்பதே இங்கு கேள்வி. நயவஞ்சகத் தனமும், பேடித்தனமான அரசியலும் மலிந்துவிட்ட நேரம் இது. கொஞ்சம் அசந்தால் போதும், 'அரசியற் சுருக்குக் கயிறு'களை எவரும் எப்போதும் மக்கள் கழுத்தில் மாட்டவே முற்படுவர். இல-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாணசபைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி எந்த மாகாணமும் இணைந்திருக்க முடியுமென்ற குறைந்தபட்ச உரிமையைக்கூட நிராகரித்துள்ள அரசு, உருப்படியான எந்தத் தீர்வை முன்வைக்கப் போகிறது? 45வருடகால அனுபவங்களை - கரும்பலகையில் எழுதிப் புறங்கையால் அழித்துவிடும் எண்ணைப் போல - இன்னும் எத்தனை முறைதான் ஏமாறப் போகிறோம்?

அப்பளா! மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங் போன்றோரின் தத்துவக் கோட்பாடுகள் வெறுமனே எமது நாட்டுக்குப் பொருந்தி வராது. யந்திரத்தனமாகப் பிரயோகிப்பது எதுவித சுகங்களையும் தராது என்ற உனது கருத்தோடு ஒத்துப் போகிறேன். இதுபோலவே கனடா, சுவிஸ், இந்தியா போன்ற நாடுகளில் இனப்பிரச்சனைக்காக முன்வைக்கப்பட்ட பாராளுமன்றத் தீர்வுகளும் வெறுமனே பொருந்திவரப் போவதில்லை என்பதை நீயும் நம்புவாயா? இந்திய உபகண்டத்தில் தேசிய இனநெருக்கடியின்போது நேருவால் கொண்டுவரப்பட்ட 'மொழிவாரி மாநில அமைப்புகள்' அன்றைய நெருக்கடியின்போது ஒட்டுப் போடப்பட்டதேயன்றி, இனப் பிரச்சனைக்கான தீர்வாக அமைந்துவிடவில்லை. அவ்வகை 'ஒட்டை'க்கூடப் போட வக்கற்ற நிலையில் அரசு திண்டாடிக் கொண்டிருக்கிறதே ஏன்? வேறு ஒன்றுமில்லை, வடக்கு கிழக்கு இணைவுதான் இதற்குத் தடை.

வடக்கு கிழக்கு இணைந்த, சுயாட்சி அதிகாரங்கள் கொண்ட தீர்வை முன்வைப்பதாக இருந்தால் அதன்பின்

www.tamilarangam.net

'கிணற்றுக் கட்டில்' அமர்ந்திருப்பதாகவே இருக்குமென அரசுக்கு எப்பவோ விளங்கிவிட்டது. வடக்கு கிழக்கைப் பிரிக்கும் தீர்வோ யுத்தத்தைத் தொடரவே வழிவகுக்கும் என்பது அனுபவ ரீதியானது. ராணுவத் தீர்வோ, குறிப்பாகக் குடாநாட்டில் ஒழுங்கான சிவில் நிர்வாகத்தை அமைக்க வழிவகுக்காது என்பதால் இதுவும் சாத்தியமற்றது என்பதுவும் அரசுக்குத் தெரிந்திருக்கும். ஆகவே, தமிழ்ப் பேரினவாதத்தை எப்படியும் உச்சநிலைக்குக் கொண்டுவந்து விடுவதும், இயக்க முரண்பாடுகளை 'உயிர்கொல்லி' நிலைக்குக் கொண்டுவந்து விடுவதுமே அரசின் அடுத்த கட்டமாக அமையப் போகிறது. வடக்கு கிழக்கு என்ற 'பேட்டை'க்குள் இரண்டுக்கு மேற்பட்ட 'பிஸ்தா'க்களை உருவாக்கி விடுவதே சிறந்த வழியென அரசு எண்ணி வருகிறது. அதற்கான வேலைத் திட்டத்தில் அரசோ ஆமை வேகத்தில் முன்னேறித்தான் வருகிறது. திருமலையில் ஈபிடிபியையும் வவுனியாவில் புளொட்டையும் நிறுத்தி, வாலையும் முடுக்கி விட்டுள்ளது. தலையால் இட்ட பணியைக் காலால் செய்து முடிக்கும் அதிசிறந்த 'கூலிக்காரன்' யார் பார்ப்போம் என இவைகளும் முண்டியடித்துக் கொண்டுதான் நிற்கின்றன. மரபுவழி முஸ்லிம் தலைமைக்கோ தேன்கலந்த நஞ்சை ஊட்டிவிட்டுப் புலிகளுக்கும் தமிழ்க்குழுக்களுக்கும் இடையில் தொட்டிலை ஆட்டிவிட்டுப் பிள்ளையையும் நுள்ளிவிட்டுத் தமிழீழ அவலநாடகத்தின் கடைசிக் காட்சியை அரசு மேடையேற்றத்தான் போகிறது.

கிழக்கில் புலிகளை விடமாட்டேன் என அரசசார்புத் தமிழ்க் குழுக்களும் வடக்கு கிழக்கில் 'ஒருமயிர்' அதிகாரமும் கைமாறிவிடப் போவதில்லை எனப் புலிகளும் 'கச்சை' கட்டுகின்றனர். இதில் யார் வெல்கிறார்களோ யார் தோற்கிறார்களோ வடக்குகிழக்கு பிரிவதற்கான சாத்தியங்கள் நிறையவே உள்ளன. இவ்வாறான ஒரு நிலை வரும்வரை அரசு எத்தீர்வையும் முன்வைக்கப் போவதில்லை. கிழக்கை இழக்கும் நிலை புலிகளுக்கு வந்தாலோ அல்லது ஏனைய குழுக்களுக்கு வந்தாலோ 'தனிமாகாண சுயாட்சிக்கு' இறங்கிவந்து 'ஜால்ரா' போடுவார்கள். இதன்பின்னர் உப்புச் சப்பற்ற ஒரு தீர்வை தலையில் மிளகாய் அரைத்துவிடுவது அரசுக்குச் சுலபமான காரியமாகிவிடும். கூட்டணி போய் ஆயுதக் கூட்டணி வந்த கதையாய்ப் போய் முடியப் போகிறது. இதையெல்லாம் யோசித்துப் பார்க்கத் தமிழ் மக்களுக்கு எங்கே நேரம் கிடைக்கப் போகிறது?

அப்பளா! இலங்கையில் தோன்றி விழுதுவிட்டுள்ள தேசிய இனச்

## 150 அயக் காணவில்லை இரகசியம் வெளிவந்தது

பனிப்போர்க் காலத்தில் அமெரிக்கா, சோவியத் யூனியன்மீது தீவிர உளவு வேலைகளில் ஈடுபட்டு வந்தது. குறிப்பாக விமானம் மூலம் இது நிகழ்ந்தது. உளவு விமானங்கள் இவ்வாறு இருபதாயிரம் தடவைகளுக்குமேல் அமெரிக்காவால் அனுப்பப் பட்டிருந்தன.

பனிப்போர்க் காலத்தில் இந்தச் செய்திகளை மறுத்து வந்த அமெரிக்கா, இப்போது அந்தக் காலத்தில் உளவுப் பறப்பில் ஈடுபட்ட 150 விமானிகள் காணாமல் போயுள்ளதாக அறிவித்துள்ளது.

– சேகரன் –

www.tamilarangam.net

சிக்கலுக்கான அரசியற் பொருளாதாரக் காரணங்கள், வரலாற்று அடிப்படைகள், தமிழ்த் தேசியவாதம், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் போன்றவற்றைச் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறில்லையெனில், தமிழரின் பிரச்சனைக்கோ தேசத்தின் அமைதிக்கோ, விடுதலைக்கோ விடைவரப் போவதில்லை என்றே படுகிறது. சமகாலத்து ராணுவப் பலத்தையும், அதன் இலக்குகளையும் நெளிவு சுளிவுகளையும் சரிவரப் புரிந்துகொள்வது அவசியம். வரலாற்று இயக்க விதியை மறுப்போமாயின் கலியாணச் சந்தடியில் மாப்பிள்ளையைக் கைவிட்ட கதைதான் எமக்கும்.

தமிழ்த் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகிறது. இவ்வேளை, ஏனைய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளையும் அது அங்கீகரிக்க வேண்டும் என நீ குரல் கொடுப்பது பாராட்டத் தக்கது. தமிழ்பேசும் மக்கள் 38%மானோர் முஸ்லிம் மக்களே. அவர்களில் 40% வடக்கு கிழக்கில் வாழ்ந்து வருகின்றனர். கண்டி, கோட்டை, யாழ் ராசதானிகளுக்கு மிக அண்மையாக சூழ்ந்து வாழ்ந்தவர்களே முதன்மையாக உயர்குடியினராகவும் நடுத்தரப் பிரிவினராகவும் காணப்படுகின்றனர்.

கிழக்கிலங்கை முஸ்லிம்களைவிட நயினாதீவு முஸ்லிம்களே மிக வறுமையில் வாழ்பவர்கள். அம்பாறை மாவட்டப் புறம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் புவிசார் தொடர்ச்சியை இழந்த நிலையிலேயே சிறிய தொகுதி மக்களாக வாழ்கின்றனர். படித்த, புத்திஜீவிகளில் பெரும்பகுதியினர் கண்டி, கொழும்பு போன்ற சிங்களப் பிரதேசங்களில் வாழ்வதால் அனைத்து முஸ்லிம் மக்களின் தலைவிதியும் இவர்களது கையிலேயே மரபுவழியாக இன்றுவரை நிலைத்து வருகிறது. (வடக்குக்) கிழக்கு முஸ்லிம் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ள 'முஸ்லிம் கொங்கிரஸ்'கூட மரபுவழி முஸ்லிம் தலைமைகளுக்குச் சளைக்காத வகையில் சேறுமிதித்தே வந்துள்ளது. தமிழ்ப் பாரம்பரியம் என்பதற்கு எதிராக 'அராபிய பாரம்பரியம்' என்பதை முன்னிறுத்தியே தமது தனித்துவத்தை நிலைநிறுத்த முற்படுகின்றனர். இது சுத்தமான காற்று வீசுவதை அடைத்து மூடும் செயலாகவே அமைந்துவிட்டது எனலாம். 'அராபியப் பாரம்பரியம்' என்பது இலங்கை தமது சொந்த நாடு என்ற எண்ணக் கருவில் இருந்து விலகிநிற்கவே வழிவகுக்கிறது. (வடக்குக்) கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களைத் தமிழ்த் தேசிய இனத்துடன் சேர்த்துப் பார்ப்பதும், வெளியே வாழும் 60% முஸ்லிம்களைச் சிங்களவர்களாகப் பார்க்கும் 'பார்வைக் குறைபாடுகள்' எம்மவர் பலரிடம் உண்டு. வ.ஐ.ச.ஜெயபாலனால் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பிற்குரிய ஆய்வைத் தொடர்ந்து, காத்திரமான ஆய்வுகள் தொடர்ச்சியாக வெளிவரவில்லை. இது வேதனைதரும் ஒன்றாகவே இருந்து வருகிறது.

தமிழ்ப் பேரினவாதத்தாலும், பௌத்த பேரினவாதத்தாலும் தமது வாழ்நிலைகள் அழித்தொழிக்கப்பட்டு வருவதைக் குறிப்பாக (வடக்கு) கிழக்கு முஸ்லிம்கள் மிகத் தெளிவாகவே உணரத் தொடங்கிவிட்டார்கள். பௌத்த பேரினவாதத்திற்கு தமிழ்ப் பேரினவாதத்தையும், தமிழ்ப் பேரினவாதத்திற்கு சிங்கள பௌத்த பேரினவாதத்தையும் காட்டி 'பல்டி' அடித்துவருகின்றன முஸ்லிம் தலைமைகள். கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களிடையே எழுந்துவரும் தன்னெழுச்சியான போராட்டங்களையும் மட்டுப்படுத்தி தனது வர்க்க அபிலாசைகளையும் பூர்த்தி செய்யப் பூச்சாண்டி காட்டியும் வருகிறது.

www.tamilarangam.net

இந்த நிலையில் தமிழ் - பௌத்த பேரினவாதங்களை எதிர்த்துத் தமது தனித்துவத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் போராட்டத்தையும் தலைமையையும் உருவாக்கிக் கொள்வது முஸ்லிம் மக்களின் கடமையே ஆகும். முஸ்லிம் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை எந்தவகையில் வென்றெடுக்க முடியும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு அவர்களுக்கே உண்டு. வேறு எவருக்கும் அது கிடையாது; கிடைக்கவும் முடியாது. வடக்குக் கிழக்கு இணைந்த சமஷ்டித் தீர்வோ அல்லது தனிமாகாண சமஷ்டியோ அல்லது வேறு எதுவோ அதைத் தீர்மானிக்கும் பொறுப்பு அவர்களுக்கே உண்டு. ஆனால், முஸ்லிம் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் முயற்சியானது தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை சிதைக்கவோ துரோகம் இழைக்கவோ கூடாது; அதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. மறுதலையாகவும் இது பொருந்தும்.

அப்பளா, வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப் பட்டது மனித நாகரிகத்திற்கு முரணான செயலே. இது சரியென எவரும் எக்காரணத்தைக் காட்டியும் நியாயப்படுத்த முடியாது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு கிழக்கில் நிகழ்ந்த தேர்தலின்போது, தமிழீழத்தில் 30% பிரதிநிதித்துவம் வழங்குவதாக புலிகள் - முஸ்லிம் கொங்கிரஸ் பேரம் பேசலில் ஈடுபட்டது. புலிகளின் போராட்டத்திற்குப் பாதகம் ஏற்படாத வகையில் தாம் தேர்தலில் பங்கேற்பதாக மு.கொ. அறிவித்தது. தேர்தலை நிராகரிக்குமாறு புலிகளது கோரிக்கையை மீறியதற்காகவோ, அல்லது அம்பாறை மாவட்டத்தில் நிகழ்ந்த தமிழ் - முஸ்லிம் இனக்கலவரங்கள் யாழ்நகர்மீதும் பரவலாம் என்ற (பாதுகாப்புக்) காரணமோ முஸ்லிம் மக்களது வெளியேற்றத்திற்கு உண்மையான காரணங்கள் அல்ல; இவை வெறும் பசப்பல்களே. உண்மையில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப் பட்டதற்கான அரசியல், பொருளாதாரக் காரணங்களைக் கண்டுகொள்வதே (இச்சூழலில்) எம் எல்லோரதும் முதன்மையான பணியாகும். இதுவே எதிர்காலத்தின் திட்டமிடலுக்கும் வழிசமைக்கும்.

---


## அவுஸ்திரேலிய முரசு

*அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் கலை இலக்கிய இதழ்.*
*தொடர்புகள்:* Post box 486,/ Moorabain,/ Victoria 3189,/ Australia.


---

இந்தியப் படை வெளியேற்றத்தின் பின் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் மூண்டு, புலிகளால் குடாநாட்டினுள் இருந்த அனைத்து ஜனநாயக சக்திகளும் அழிக்கப் பட்டன. தனிக்காட்டு ராஜாவாக நின்ற புலிகள் படிப்படியாக ஒரு அரசைக் கட்டும் நோக்கில் சிவில் நிர்வாகத்தில் கைவைத்தனர். அரசோ தீவுப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. ஒருபுறம் ராணுவத் தாக்குதலையும், மறுபுறம் பொருளாதாரத் தடையையும் கொண்டு போராட்டத்தை நசுக்கியது. இந்நிலையில் தமிழீழத்தின் தேசிய மூலதனங்களான மீன்பிடி, விவசாயம் போன்றவற்றை ஊக்குவிக்கப் புலிகளால் முடியவில்லை. 'லேபல்' மாற்ற அரசொன்றை இலக்காகக் கொண்டு அவர்கள் போராடிவருவதால் இதைச் செய்யவில்லை; செய்யப் போவதுமில்லை. அதாவது தமிழீழப் பிரதேசத்தை அரசிடம் இருந்து விடுவித்து

www.tamilarangam.net

அதே பொருளாதார அடித்தளத்தில் தமக்கென ஒரு அரசை நிறுவுவதையே குறிக்கிறது. இதனால் இவர்களது கவனம் எப்போதும் வர்த்தக மூலதனத்திலேயே நிலைகொண்டிருக்கும். பலத்த கடல் கண்காணிப்பு வலயத்தினால் மீன்பிடி கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளது. கரையோரப் பகுதிகளையும் குடாநாட்டின் பெரும் விவசாயப் பகுதிகளையும் அரசு கைப்பற்றி முன்னேறியதால் போராட்டம் யாழ்நகருக்குள் ஒடுங்கியது. பொருளாதாரத் தடைகாரணமாக வறிய தொழிலாளரும் கூலி விவசாயிகளும் போக்கிடம் அற்றவர்களாக புலிகளால் உள்வாங்கப் பட்டனர். அகதிகள் மூலதனமே போராட்டத்திற்கு முண்டுகொடுத்துக் கொண்டிருந்தது. ஆகவே வர்த்தகப் பொருளாதாரத்தை எப்படியாவது கைப்பற்றிவிட நினைத்த புலிகள் வர்த்தகர்கள்மீது கப்பம் விதித்தனர்.

குடாநாட்டில் முஸ்லிம் மக்களே நகர்சார்ந்த வர்த்தகம், சிறுதொழில், அரசாங்க தனியார் துறைகளில் முதன்மையாகக் காணப்பட்டதால் இந்நடவடிக்கை இவர்களைப் பெரிதும் பாதித்தது. வசதிபடைத்த தமிழர்கள் குடாநாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்ததாலும், வெளிநாட்டுப் பொருளாதாரம் கொழும்புக்குள் முடங்கத் தொடங்கியதாலும் வறிய தொழிலாள - விவசாயிகளது வாழ்நிலையை உத்தரவாதம் செய்யவேண்டி இருந்ததாலும், வர்த்தகப் பொருளாதாரத்தைத் தம் கைவசம் கொண்டுவர உடனடியாக முற்பட்டனர். வர்த்தக பொருளாதாரத்தின் பெரும் செல்வாக்கு யாழ் முஸ்லிம்களது கையிலேயே இருந்ததால் தமிழ் முஸ்லிம் முரண்பாட்டை ஊக்குவிக்கவும், சில காட்டிக்கொடுப்புக்குத் தள்ளிவிடவும் வழிசமைத்தது. சாதிரீதியான தொழிலை கூலிரீதியான தொழிலாக மாற்றி அமைத்ததனூடாக வறிய தொழிலாள விவசாயிகளை ஓரளவு திருப்திப்படுத்தினர். இவர்களது வாழ்நிலை உறுதி செய்யப் படாவிடில் உள்ளுக்குள் புரட்சி வெடிப்பது நிச்சயம். இதனால் உடனடியாக முஸ்லிம் மக்களின் கைகளில் இருந்த சிறுதொழில்களையும், நகர்சார்ந்த வர்த்தகத்தையும் பிடுங்கிக் கொள்வதால் தாம் நிலைத்து நிற்க முடியும் என்ற நிலைக்குப் புலிகள் வந்தனர். தனால் முஸ்லிம் மக்கள்மீது பசப்பல் காரணங்களைக் காட்டி அடித்துத் துரத்தினர். இது தமிழ்ப் பேரினவாதத்தின் உச்ச நிலையே. தமிழ்த் தேசியவாதம் ஓர் அரசை ஸ்தாபித்துக் கொள்ளும் போக்கு, இன்றைய அடித்தளத்தில் பேரினவாதமாகவே வளரும்; சரியான பொருளாதார அடித்தளம் இடப்படும்வரை.

அப்பளா, முஸ்லிம் மக்களது வெளியேற்றம் தொடர்பான பொருளாதாரக் காரணங்களை முன்வைத்துள்ளேன். இவை விவாதத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட வேண்டியதும், செழுமைப் படுத்தப்பட வேண்டியதும் என்பதை மறந்துவிடாதே. இன்றைய நிலையில் இதை யார் செய்வது என்பதே பெரும் கேள்வி.

இன்றைய பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு கட்டப்படும் அரசு எவ்வகையிலும் இனச் சிக்கலைத் தீர்க்காது; வளர்த்துவிடவே முயலும். தமிழீழ அரசாக இருந்தாலும் இதே அடித்தளத்தில் கட்டப்படும் முயற்சி அதன் பிரதேசத்தில் உள்ள சிறுபான்மை இனங்களுக்கிடையில் இனச்சிக்கலை ஆழமாக்கி, தமிழ்த் தேசியவாதத்தைப் பேரினவாதத்தின் உச்சத்திற்கு இட்டுச் செல்லும். பொருளாதார அடித்தளத்தை மாற்றாமல் இனச்சிக்கலில் இருந்து விடுபடவே முடியாது அப்பளா!

ப்பிரியமுடன்,
ராமன்,
ஆனி - 93

www.tamilarangam.net

# பாலஸ்தீன விடுதலை எழுச்சி இன்ட்டிஃபாதா: அரசியல் பகுப்பாய்வு

(முன்தொடர்)

இரண்டாவது பிரதான சறுக்கல் என்னவென்றால், அறிவார்ந்த மொழிசார்ந்த மேலாதிக்கத்தை **(Linguistic dominance)** மறுபடியும் இஸ்ரேல் ஸ்தாபிக்க முயல்வது. திரித்துக் காட்டுவதன் மூலம், யதார்த்தத்தைக் கலைத்துக் காட்டுவதன் மூலம் உலகைத் திசைதிருப்புவது.

அதாவது **'Inter - fada'** அல்லது 'பயங்கர மறு எழுச்சி' என்றெல்லாம் வாக்கியங்களைக் கையாள்வது. சர்வதேசிய அபிப்பிராயங்களை உருவாக்குவதில் இஸ்ரேல் இவ்வாறான வார்த்தைகளையும், மொழிப் பிரயோகங்களையும் கையாண்டு வெற்றி பெற்றிருக்கிறது.

எட்வர்ட் ஸைத் **(Edward Said)** சொல்கிறபடி எமது சரிதைகளையும் எமது உரிமைகளையும் நேரடியாகவும் தெளிவாகவும் சொல்வதற்கான எமது உரிமை மறுக்கப்படுகிறது.

பாலஸ்தீனியர்கள் எவ்வாறு புரிந்துகொள்ளப்பட வேண்டும், அவர்கள் சார்ந்த பிரச்சனைகளை எவ்வாறு நோக்க வேண்டும் என்று நாங்கள் தீர்மானிப்பதற்கான எங்கள் உரிமையை, எங்கள் வார்த்தைகளை, எங்கள் வாக்கியங்களை, எங்கள் மொழியைக் கட்டுப்படுத்த, தத்தெடுத்துக் கொள்ள, ஆதிக்கம் செய்ய, எம்மீது சுமத்த இனி நாங்கள் இஸ்ரேலியர்களை அனுமதிக்க மாட்டோம். எம் உரிமையை எம் சொற்களில் எம் மொழியில் எம் கருத்தாங்களில் நாம் சொல்வோம்.

பாலஸ்தீனியர்களை உலக தரிசனத்தில் இருந்து விலத்திவைக்க கிளிப்பிள்ளை மாதிரி செய்த பிரச்சாரங்களை, சுமத்தல்களை இனி எம்மீது சுமத்த நாங்கள் விடமாட்டோம்.

விவாதத்துக்கான பொருளடக்கத்தை உருவாக்குவதில் உள்ளார்ந்து பிரக்ஞையற்ற



www.tamilarangam.net

நிலைமையினூடே தனது நலன்களை இஸ்ரேல் திணிக்கிறது. உண்மையாகப் பேசவேண்டுமானால் இஸ்ரேலின் பாதுகாப்பு அல்ல என் அக்கறை, எனது மக்களின் நலன்தான் என் அக்கறை. இஸ்ரேல் கையாளும் மொழி பொய்யானது, போலியானது, இந்த மொழியை பாலஸ்தீனியர்கள் கையாள முடியாது, ஒப்புக்கொள்ள முடியாது.


இஸ்ரேலின் பாதுகாப்பை நாங்கள் காத்துநிற்க முயலவில்லை. எமது தலையாய நோக்கம், நெஞ்சுக்கு நேர்மையாக எமது மக்களின் பாதுகாப்பும் நலனும்தான். குறிப்பாக இந்த ஆக்கிரமிப்பின்கீழ் எம் குந்தைகளின் எதிர்காலம்தான் எம் அக்கறை. எமது மக்களை, எம் குழந்தைகளைச் சித்திரவதை செய்வதால், கொல்வதால் இஸ்ரேல் ராணுவத்தினரின் மனோநிலை வன்முறை மயப்படுத்தப் படுவது பற்றிய பரிதாப உணர்வும், அவர்களின் பதட்டமான மனநிலைப் பிறழ்வும் நிச்சயமாக எனது அக்கறைகள் இல்லை. அதைப்பற்றி நான் கவலைப்படத் தேவையில்லை. எனது குழந்தைகளின் நலவாழ்வு பற்றி நான் கவலைப்படுகிறேன். சித்ரவதைப் படுத்தப்படுகிற, கொல்லப்படுகிற எம் அப்பாவி மக்களைப் பற்றி நான் கவலைப் படுகிறேன். இவைதான் எனது பிரதான அக்கறைகள். எனது எதிரியின் நலன்களுக்காக நான் பரிதாபப்பட முடியாது.- இப்போதும் நாங்கள் எதிரிகள் - அது எனது அக்கறைகள் ஆகமுடியாது. நாங்கள் நேர்மையாக எமது நலன்களை முன்வைக்க வேண்டும். நேர்மை இல்லாமல், நாம் எங்கும் சந்திக்க முடியாது, இணக்கம் காண்பது என்பது முடியாது.

எமக்கு இப்போது தேவைப்படுவது, ஓர் இலக்கியச் சொற்றொடரைக் கடன்வாங்கிச் சொல்லவேண்டும் என்றால் "அவநம்பிக்கையை விரும்பி விலக்குவது! பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பும்வரை நாம் காத்திருக்க முடியாது. ஏனெனில் அந்த நேரத்தில் பலஸ்தீனிய சமூகமோ, அல்லது பாலஸ்தீனிய மனிதக்கூட்டமோ விட்டுவைக்கப் பட்டிராமல் போகலாம். அடுத்தடுத்து, ஒரே காலகட்டத்தில், இணைவாக, தெளிவான பொறுப்பான தீவிரமான அரசியல் நிலைப்பாடுகள் நம்பிக்கைக் கட்டமைப்பை நோக்கி நிகழவேண்டும்.

ஆனால் நம்பிக்கை மற்றும்



www.tamilarangam.net




பாதுகாப்பின் மிகப்பெரிய ஆதாரசுருதி சமாதானம், சர்வதேசிய உத்தரவாதத்துடனும் அதிகாரத்தின் கீழும் விளையும் சமாதானம்.

மூன்றாவது சறுக்கல், தந்திரோபாயங்களையும் பேச்சுவார்த்தைக்கான திசைவழியைத் தேர்ந்தெடுப்பதிலும். இஸ்ரேல் கையெழுப்பும் தாக்குதலையும் ஆதிக்கத்துடன் தன்கையில் எடுத்துக்கொள்ள மீண்டும் முனைவது.

பாலஸ்தீன இஸ்ரேல் பிரச்சினையைக் கையாளும் உலக சக்தியின் முன் விவாதத்திற்கான பொருளடக்கத்தைத் தீர்மானிப்பதிலும், குறிப்பாக அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிப்பதிலும் மேலாதிக்கம் செய்தல். இஸ்ரேல், ஒரு வாடிக்கைதார நாடாக (client state), உண்மையில் தனது காபந்து நாடான அமெரிக்காவை, ஒரு மிகப்பெரிய வல்லரசாக தனது நோக்கங்களை அடைவதில் வெற்றிகரமாகக் கையாள முடிகிறது. இப்போது அமெரிக்கா கொஞ்சம் மாறுதலாக இஸ்ரேலுக்கு முரண்பட்டு சில அறிக்கைகளை விடுக்கும் இச்சூழலில் எனக்குத் தெரியயவருகிறது: கொங்கிரஸில் ஜெருசலத்தை இணைந்த தலைநகராகப் பிரகடனப் படுத்துவதற்கான நகர்வுகள் தெரிகிறது.

ஆக, பலவழிகளில் அமெரிக்காவின் சுதந்திரம், தனது வெளியுறவுக் கொள்கைகளை உருவாக்குவது தொடர்பாக வரையறுக்கப் பட்டுள்ளது, கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இஸ்ரேலின் நோக்கங்களில் நலன்களின் பொருட்டு எல்லையிடப் படுகிறது. ஒரு கூட்டு அரசாங்கத்தின் மூலம் அல்லது இந்த நிலவும் அரசாங்கத்தின் மூலம்தான் சமாதானம் சாத்தியம் எனும் நிலையை உருவாக்க இஸ்ரேலுக்குள் இடது சக்திகளைச் சிதறடிப்பது அல்லது லேபர் கட்சியை நீர்த்துப் பேரகச் செய்வது என்ற

www.tamilarangam.net

நிலைபாடும் வருகிறது. இது அரசியல் நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்கிறது.


நான்காவது சறுக்கல் என்னவென்றால் அரசியல் பேச்சுவார்த்தைக்கோ தீர்வுக்கோ எந்த விதத்திலும் சம்பந்தமற்ற அர்த்தமற்ற நிகழ்வுகளையும், விஷயங்களையும் விவாதத்திற்குக் கொண்டுவர இஸ்ரேல் முயல்வது. இரும்புக்கரக் கொள்கை, அடக்குமுறைகளைக் கொண்டு பாலஸ்தீன உயிரழிப்புகளின் முக்கியத்துவத்தை அழிப்பதைப் பழக்கத்திற் கொண்டுவரல் இதில் முக்கியமானது. மூடுண்ட பிரதேசக் கொள்கை, சில குறிப்பிட்ட பிரஅதசங்கள் பற்றி ஏதும் பேசாமல் இருட்டடிப்பது. சோவியத் யூதர்கள் குடியேற்றம் தொடர்பான பிரச்சினை நிகழ்ச்சிகளை அர்த்தமின்றிக் கிளறுவது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில், கிழக்கு ஜெருசலம் உள்பட சோவியத் யூதர்களைக் குடியேற்றுவது எந்தவிதத்திலும் சமாதானத்துக்கு உகந்ததல்ல, மஏறாக சமாதானத்தை அழிப்பது, அதை மிகக்கீழ் இழிந்த நிலைக்குக் கொண்டு செல்வது.

இந்தச் சமகால அரசியற் சூழலில் மூன்று தலையாய, ஆபத்துக்குரிய விஷயதானங்களைச் சொல்லவேண்டும்.

முதலாவதாக, பாலஸ்தீனக் குரலையும் உரிமையையும் பலவந்தமாக எடுத்துக்கொள்ளல். நான் இதைப் பாலஸ்தீன இறையாண்மையைக் கடத்துவது என்கிறேன். வீட்டோ செய்வது மற்றும் எம் பிரதிநிதித்துவத்தைக் கட்டுப் படுத்துவது இதில் சேரும். கடந்த காலத்தில் எங்கள் வரலாறென்பது எங்களுக்கு வெளியில் உள்ள சக்திகளாலேயே உருவாக்கப் பட்டது. அந்தக் குறிப்பிட்ட தவறை மறுபடி செய்ய நாம் அனுமதிக்க மாட்டோம். எங்கள் குரலைப் பலவந்தமாகப் பிறர் எடுத்துக்கொள்ள விடமாட்டோம். இதுதான் சமாதானத்தை விரைவில் கொண்டுவரும்.

இரண்டாவது தவறு, அடிக்கடி செய்யப்படும் தவறு. பாலஸ்தீன இஸ்ரேல் பிரச்சனைகள் தொடர்பாகப் பேசும்போது பிற அரசாங்கங்கள் எங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் தவறு. எங்களுக்காகப் பிறரெவரும் சமாதானத்தை வழங்கமுடியாது. எங்களுக்கான சமாதானத்தை எங்களுக்கு நாங்களே வழங்கமுடியும். வரலாற்றின் முதன்முறையாக தேசத்தின் முழுமையான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறோம், அமைதியை வென்றெடுக்க உறுதி கொண்டுள்ளோம்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம்தான் எமது பிரதிநிதி, எமது நலன்களைச் சொல்வது. எந்தவிதத்திலும் பிரதித்தலைமையைத் தேடக் காரணமில்லை. எந்தப் பேச்சுவார்த்தைகள் ஆனாலும், எந்தக் கலந்துரையாடல்கள் ஆனாலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை விலக்குவதற்கான எந்த முகாந்திரமும் இல்லை. பாலஸ்தீன மக்கள்தான் பாலஸ்தீன விடுதலை இயக்கம். ஆகவே பாலஸ்தீன விடுதலை இயக்கம்தான் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதனைப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். பேச்சுவார்த்தைப் பாத்திரங்கள் குறித்துத் தெளிவாக வரையறுக்க வேண்டும். அமெரிக்கா நடுநிலைமையுள்ள சமாதான தூதனாகப் பங்கேற்க வேண்டும் அல்லது பிரச்சனைக்குரிய ஒரு கட்சியாகப் பாத்திரமேற்க வேண்டும்.●



www.tamilarangam.net

# கண்டது, கேட்டது, கண்டவர் சொன்னது

அயலான்

நோர்வே விரைவில் தேர்தலை எதிர்நோக்குகிறது என்ற செய்தி இங்குள்ள தமிழர்களில் ஒரு பகுதியினருக்குத் தெரியாமல் இருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. அனேக தமிழர்களைப் பொறுத்தவரை இங்கே ராமன் ஆண்டாலென்ன ராவணன் ஆண்டாலென்ன ஒரே நிலைதான். ஆட்சி மாறுவது தங்களுக்கு எந்தவித மாற்றத்தையும் பெரியளவில் கொண்டுவராது என்ற எண்ணமோ என்னவோ. ஆனால் இந்தத் தடவைதான் தேர்தலில் மிக அதிக தமிழர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவுசெய்யப் போகிறார்கள்.

வாக்களிப்பதில் எங்களில் பெரும்பாலானோர் அக்கறை எதுவும் கொண்டிருப்பதில்லை. அப்படியே வாக்களித்தாலும், முழு நோர்வேயிலும் பரந்து வாழும் தமிழர்களது வாக்குகள் ஒரே கட்சியைத்தான் சென்றடையும் எனவும் உறுதியாகச் சொல்ல முடியாது. வடக்கில் வாழ்பவர்கள் தொழிற்கட்சியை ஆதரிக்காமல் விடலாம். ஒஸ்லோவில் இருப்பவர்கள் தொழிற்கட்சி பரவாயில்லை என்று நினைத்து அதற்கு வாக்களித்தாலும் வாக்களிக்கலாம். அல்லது இதற்கு நேரெதிராகவும் நிகழலாம். தமிழர்களிடையே ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தினால் என்ன என்று சில சமயம் தோன்றும். ஆனால், வாக்களிப்பவர்களைவிட வாக்களியாமல் விடுபவர்களது எண்ணிக்கையே தமிழரிடையே அதிகம் என்றால் என்ன செய்வது?



www.tamilarangam.net

ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களைப் பொறுத்தவரை, நூல் வெளியீடு என்பது இந்த நாடுகளில் சாத்தியமா என்ற கேள்வி கடந்த தசாப்தம் முடியும்வரை நிலவியது. இப்போது, அடுத்ததாக யாருடைய நூல் வெளிவர உள்ளது என்பது இலக்கிய ஆர்வலர்களிடையே இயல்பாகிவிடக் கூடிய கேள்வி.

அண்மையில் அழகான முறையில் வெளிவந்த நூல் ஒன்று கோசல்யா கவிதைகள். இருவர்ணத்தில் எம்மவரிடையே வாழும் நல்ல ஓவியர்களில் ஒருவரான கிருஷஷ்ணராஜாவின் அட்டை




ஓவியத்துடன் அழகிய முறையில் கட்டப்பட்ட ஒரு தொகுதி. ஐரோப்பிய நாடுகளிடையே நூல் வெளியீடு என்பது இயல்பாகிவிட்டாலும், இலகுவாகிவிடாத இந்தச் சூழலில், தனியொருவராக நூல்களைப் பதிப்பிப்பதில் ஈடுபட்டுவரும் சுசீந்திரனின் 'நூல்' வெளியீடு இந்தத் தொகுதி. நல்ல நூல்களைப் பதிப்பிப்பது மட்டுமன்றிப் புதிய எழுத்தாளர்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற ஆர்வம் 'நூலி'ல் தெரிகிறது.

தொகுதியின் 64 பக்கங்களில் பதினெட்டை, என்னுரை, படையல், அன்னையின் ஆசியுடன், கோசல்யா கவிதைகள், இது எமது குரல், அணிந்துரை என்ற தலைப்புகளில் நூலைப் பற்றியும், நூலாசிரியரைப் பற்றியும் எழுதப்பட்ட விடயங்கள் விழுங்கிவிடுகின்றன. இது அவசியமாகத் தெரியவில்லை. இந்தப் பதினெட்டுப் பக்கங்களால், கவிதைகளைவிடக் கவிஞரது (கவிஞை?) பின்னணி, ஊர், குடும்பம் போன்ற விடயங்களே துருத்திக் கொண்டு தெரிகின்றன. ஒரு கவிதை அல்லது கவிதைத் தொகுதி கூறுகிற விடயங்களைக் காட்டிலும், மேலதிகமாக இவ்வாறு விடயங்கள் சொல்லப்பட வேண்டும் என்றால், அது கவிஞரதும் கவிதைத் தொகுதியினதும் தோல்வியே என எனக்குத் தோன்றுகிறது.

கவிதைகளைப் பொறுத்தவரை, மனதில் இலகுவில் கவிதையின் கருப்பொருள் இறங்கிவிடுகிறது. சிலர் கவிதை என்ற பெயரில் விடுக்கின்ற புதிர்கள் இந்தத் தொகுதியில் இல்லை. ஆனால், கவிதை என்றால் அவை எதுகை மோனை என்பவற்றைச் சுமந்திருத்தல் அவசியம் என்ற எண்ணத்தில், கோசல்யா கவிஞராக இல்லாமல் வெறும் சொல்லடுக்குபவராகவே தெரிகிறார். இதை அவர் மாற்றுவது அவருக்கு நல்லது. எதுகை மோனையுடனேயும் நல்ல கவிதைகள் உள்ளன, எதுகை மோனை எதுவும் இல்லாமலேயே அற்புதமான கவிதைகளும் உள்ளன. அவற்றைக் கோசல்யா தேடி வாசிப்பது அவரது எதிர்காலக் கவிதைகளை வளமுள்ளதாக்கும்.

மரபுக் கவிதைகளை எழுதுவதும், மரபுமீறிய கவிதைகளை எழுதுவதும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரவர் சுதந்திரம், ஆனால் கவிதை என்ற பெயரில் வருபவை கவிதைகளாக இருத்தல் அவசியம் என்று கோர ஒவ்வொரு வாசகனுக்கும் உரிமை உண்டு.

கவிதைத் தொகுதியைப் பெற்றுப் படிக்க ஆர்வம் உடையோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். **NOOL/ N.Suseendran/ Brunsbutteler Damm 21/ 1000 Berlin 20.**

அண்மையில், ஈழத்தமிழர்மீது நிகழ்த்தப்பட்ட 83யூலைப் படுகொலையின் பத்தாண்டு நினைவு துயரத்தோடும், உயிர்த்தெழும் வீரத்தோடும் உலகின் பல பாகங்களில் கொண்டாடப் பட்டது. 83இல் இந்தப் படுகொலைகளை நிகழ்த்துவதில் முக்கிய பங்கு வகித்தது இலங்கை அரசு. அந்த அரசின் திட்டமிட்ட இனஅழிப்பின் உச்சமாக வெலிக்கடைச் சிறையில் தமிழ் மக்களது நேசத்திற்குரிய போராளிகள் ஐம்பதுக்கு மேற்பட்டோர் குரூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக இந்தத் தாக்குதலில் இருந்து சிலர் உயிர்தப்பினர். இவர்களில் ஒருவர் இலங்கை அரசுடன் இன்று மிக நெருக்கமாக இருக்கும் 'தளபதி' ஒருவர். கொலையாளியையும் நேசிக்கும் உயர்ந்த உள்ளம் இவருக்கு இருக்கிறதோ என்னவோ.

நான் சொல்ல நினைத்தது வேறு. இலங்கையின் மூத்த ஆங்கிலப் பத்திரிகையான 'சண்டே ஒப்சேவர்' வார இதழில் ஒரு கேலிச் சித்திரம் யூலை83ஐயொட்டி வெளியாகியிருந்தது. 'புலிகளின் பத்தாண்டு நிறைவைக் கொண்டாடல்' என்று தலைப்பிடப்பட்ட இந்தக் கேலிச் சித்திரத்தில் புலிகளை வெறுமனே மிருகங்களாகச் சித்தரித்திருக்கிறார் ஓவியர் எஸ்.சி.ஒபாத. நாஜிச் சின்னத்துடன் தொப்பி அணிந்த புலித்தலைவர், கசாப்புக் கடை பாணியில்,



www.tamilarangam.net

மேசையில் தலையற்ற மனித உடல் ஒரு 'பிளேட்'டில் வைக்கப்பட்டபடி அதன் முன் காட்சி தருகிறார். அவரைச் சுற்றி ஏனைய புலிகள் நாதஸ்வரம், தவில் சகிதமும் மனித உடலைப் பரிமாறத் தயாராக வைத்தபடியும் ஆடிப்பாடி மகிழ்ச்சியாகக் காட்சி தருகின்றனர். மேசையின்கீழ் ஏராளமான மனிதத் தலைகள், மண்டையோடுகள். ஒருகரையில் லைற் போஸ்ற்றில் ஒருவர் தொங்கியபடி.

புலிகள் மனித உயிரைக் குடிக்கும் வெறி கொண்டவர்களாகவும், வேறெந்த நோக்கமும் அற்றவர்களாகவும் சித்தரிப்பதில் ஒபாதவும், அவரது இனவெறிக் கும்பல்களும் திருப்தி அடையலாம். ஆனால், அவ்வாறு புலிகளைச் சித்தரிப்பது, மறைமுகமாகத் தமிழர் அனைவரையும்தான் என்பது எவருக்கும் விளங்கும் ஒரு விஷயம். இனவெறியைத் தூண்டிவிடும் இலங்கைச் சிங்களப் பத்திரிகைகள் பலவற்றுக்கு ஆங்கிலப் பத்திரிகைகளும் சளைத்தன அல்ல என்பதை இந்தப் படம் மூலம் உணரமுடிந்தது.

புலிகள் செய்வதாகக் கூறி ஒபாத சித்தரித்துள்ள காட்சிகள் அனைத்தும் இலங்கை அரசால் செய்யப் படுபவைதான். அரசை இதேபோலக் கேலிச்சித்திரமாக்க ஒபாத முன்வருவாரா என்பது பெரியதொரு '?'. தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை மட்டுமல்ல, அடிப்படை மனித கௌரவத்தையே இந்தச் சிங்கள இனவாதிகளிடம் இருந்து அமைதியான முறையில் வென்றெடுக்க முடியுமா என்பது வரவரப் பலத்த சந்தேகமாகிக் கொண்டு வருகிறது.

அதெல்லாம் சரிதான், இந்தப்பெரிய இனப்படுகொலையை நினைவுகூர்வதைக் கேலிக்கூத்தாக்கும் இந்த இனவாத ஓவியருக்கு, 1983, புலிகளின் தோற்ற ஆண்டல்ல என்ற சின்னச் சங்கதி ஏன் தெரியாமற் போனது? ●

## சுதந்திர இலக்கிய விழா'93

*தமிழில் வெளியான சிறந்த படைப்புகளுக்கான பரிசுகளைக் கடந்த வருடம் போலவே வழங்க சுதந்திர இலக்கிய விழா அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர். அச்சில் வெளிவந்த படைப்புகளுக்கான போட்டி, இளம் எழுத்தாளர்களுக்கான போட்டி என இரு பிரிவுகளாக நிகழும் இப்போட்டி பற்றிய விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்: 59* Old Cottawa road/ Merigana/ Nugegoda/ Sri Lanka.

●

நோர்வே நாட்டவர்களின் சாதனை வரிசையில் இன்று தீயணைப்பு விடயமும் சேர்ந்துள்ளது. தற்போதைய கணக்குப்படி நோர்வேயில் 96.7% வீடுகளில் தீ எச்சரிப்புக் கருவியும், 95.6% வீடுகளில் உடனடித் தீயணைப்புக் கருவியும் உள்ளன. இது ஒரு உலக சாதனையாகும். இத்தகைய நடவடிக்கைகளால் தீவிபத்தால் ஏற்படக்கூடிய உயிர்ச்சேதம் பெருமளவு குறைக்கப் பட்டுள்ளது.

**சரிநிகர்**

18/2 அலோ சாலை,
கொழும்பு - 03
தொலைபேசி: 576704

www.tamilarangam.net

# அடுப்பங்கரையில் இருந்து ஆயுதப் போராட்டம்வரை

• சியாமளா

எண்பதுகளின் பின் எழுச்சிபெறத் தொடங்கிய பெண்நிலைவாதக் கருத்துகள் இன்றுவரை சரியான திசைவழியேயான நகர்வு எதுவும் இன்றி, சர்ச்சைக்கான விடயமாகவே இருந்து வருகிறது.

கூர்மை அடைந்த தேசியப் போராட்ட அலைகளுக்குள் கணிசமான அளவு பெண்களும் அடங்குவர். இந்த நேரத்தில் பெண் ஒடுக்குமுறை பற்றியும், பெண்விடுதலையின் அவசியம் பற்றியும் பெரிதாகப் பரவலாகப் பேசப்பட்டது. பெண்கள் அமைப்புகள் உருவாகின. பெண்கள் பிரச்சனையை முக்கியத்துவப் படுத்தும் சஞ்சிகைகள் வெளிக்கொணரப் பட்டதோடு தேசியப் போரில் பெண்கள் இணைந்துகொள்ள வேண்டியதின் அவசியமும் வலியுறுத்தப் பட்டது.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு திருப்புமுனையை எடுத்துக் கொண்டதும், பெண்விடுதலைக் கோஷங்கள் எந்த வேகத்தில் எழுந்தனவோ அதே வேகத்திலேயே செயலிழந்தும் போயின. இருப்பினும் இந்தத் தேசியப் போரெழுச்சி, பெண்களைப் பொறுத்தவரை சில சாதகமான அம்சங்களையும் தவிர்க்க முடியாதபடி பிரசவித்துள்ளது. பெண்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வைப், பரந்த நோக்கை இந்தப் போராட்டம் ஏற்படுத்தியதோடு, பெண்கள் ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் வகையில் பெண்நிலைவாதிகள் பலரையும் உருவாக்கிச் சென்றுள்ளது. அந்த வகையில் போராட்டம் தனது திசையைவிட்டு வேறுவழி சென்றாலும், பெண்கள் மத்தியில் அது ஏற்படுத்திய தாக்கம், இன்று பெண்விடுதலை பற்றிய கருத்துகள் முன்னணியில் இருக்கவும் அதுபற்றிப் பேசப்படவும் வழிவகுத்துள்ளது.



www.tamilarangam.net

இதன்விளைவுதான் பல்வேறு காரணிகளுக்காக மண்ணைவிட்டு ஐரோப்பிய நாடுகட்டுப் புலம்பெயர்ந்துள்ள தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இருந்து பெண்களின் குரலாக ஒலிக்கின்ற பெண்விடுதலைக் கருத்துகளும், அவற்றைத் தாங்கிவரும், பெண்களுக்கெனப் பெண்களாலேயே நடத்தப்படும் சஞ்சிகைகளின் உருவாக்கமும் எனலாம். இவ்வாறு பெண்விடுதலைக் கருத்துகள் தீவிரமடைந்துள்ள நிலைமை பெண்களுக்குப் பெருமளவிலான நம்பிக்கையைத் தருவதாக இருந்தாலும், பெண்விடுதலை பற்றிய சரியான கருத்துப் பலம் இல்லாமையும் பொதுவான பெண்கள் அமைப்பு ஒன்று உருவாக்கப் படாமல் இருப்பதுவும் பெருங்குறைபாடுகள் ஆகும்.

பெண்களினது இந்தப் பன்முகப்பட்ட எழுச்சி ஒருங்கிணைக்கப் படாது, சரியாக நெறிப்படுத்தப் படாது விடப்படுமாயின் இவை அனைத்தும் வெற்றுக்கோஷங்களாகப் பயனற்றுப் போகும் அபாயமும் உண்டு. ஏன் இன்றுவரை இந்த நிலைமை நீடிக்கிறது என்பதற்கான காரணிகள் ஆராயப்பட்டுத் தீர்வு காணப்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவை ஆகும். எதிர்காலத்தில் ஒரு சரியான பாதையை வகுத்துக் கொள்ளவும், தீர்க்கமான ஒரு கருத்தை உருவாக்கவும், கடந்தகால வரலாறு எத்தகைய படிப்பினையைப் பெண்களுக்காக விட்டுச் சென்றுள்ளது என்பதை மீள நோக்குவது பயனுள்ளது.

தேசிய விடுதலையை மையமாகக் கொண்டு, பல்வேறு அமைப்புகள் எமது மண்ணில் தோன்றியபோது பெரும்பான்மை அமைப்புகளில் பெண்களும் அதிகளவில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண்களிடம், இவர்கள் சார்ந்திருந்த அமைப்புகள் பெண்விடுதலை தொடர்பாக எத்தகைய கருத்துகளைக் கொண்டிருந்தனவோ, அதே கருத்துகளே காணப்பட்டன. இந்த அமைப்புகள் தங்கள் தங்கள் அமைப்புகளை விரிவுபடுத்த வேண்டி ஆளணி சேர்ப்பதில்தான் முனைப்பாக இருந்தார்களேயன்றி, பெண்கள் தனியாக அமைப்பாக வேண்டியதின் அவசியத்திலோ, அவர்களைக் கருத்து ரீதியாக வளர்ப்பதிலோ அக்கறை செலுத்தவில்லை.

இவர்கள் விடுதலை அமைப்புகளில் சேர்க்கப்பட்ட போது, பெண் ஒடுக்குமுறை - அதன் வரலாறு பற்றிய கருத்தரங்குகள் நிகழ்த்தப் பட்டன. ஆதிப்பொதுவுடைமைச் சமுதாயத்தில் பெண் எவ்வாறு ஒரு சமூகக் குழுவுக்குத் தலைவியாக, வல்லவளாக இருந்தாள் என்பதுவும், தொடர்ந்து மாறிவந்த சமூக அமைப்புகளில் எவ்வாறு ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப் பட்டாள் என்பதுவும் இந்தக் கருத்தரங்குகளில் எடுத்துரைக்கப் பட்டது. பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதும் ஒரு சமூகத்தில் இருந்து புறப்பட்ட இவர்களை இந்தக் கருத்துகள் உடனே பற்றிக்கொண்டன. தாங்கள் இதுவரை அடக்கப் பட்டிருந்த ஒடுக்குமுறைச் சூழலை அறவே வெறுத்தார்கள். தாங்கள் முழுவதுமாகச் சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்பதான உணர்வே இவர்களிடம் இருந்தது. இதனை இவர்கள் சார்ந்த அமைப்புகளில் இவர்களது செயற்பாடுகளே வெளிப்படுத்தி நின்றன. இத்தகைய விடுதலை உணர்வைப் பிழையானதெனக் கூறிவிடமுடியாது. ஆனால் பழமையான கலாச்சார அம்சங்களைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கும், இன்னமும் மாற்றமடையாத ஒரு சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் கருத்தில் இவர்கள் கொள்ளவில்லை. இந்த அடிப்படையிலேயே மக்களுடனான

www.tamilarangam.net



'Ain el-Hilweh

இவர்களது அணுகுமுறைகளும் அமைந்திருந்தன. உதாரணமாக ஆண்களுடன் சேர்ந்து அமைப்பு வேலைகளில் ஈடுபடும்போது ஆண்களைப் பெண்கள் சைக்கிளில் ஏற்றிச் சென்றனர். (இதனை இங்கே குறிப்பிடுவது அவ்வாறு செய்யக்கூடாது என்ற கருத்தில் அல்ல)

இந்த நடவடிக்கை சரியா பிழையா என்ற ஆய்விற்குமுன், இத்தகைய நடவடிக்கைகழ் மக்கள் மத்தியில் என்ன தாக்கத்தை உண்டுபண்ணின என்பதை ஆராய்வதே பொருத்தமானது. ஏற்கனவே குறிப்பிட்டது போல, மாற்றமடையாத ஒரு சமூகத்தினது பார்வையில் இவை பெண்கள் பற்றிய தவறான கணிப்பீட்டிற்கே வழிவகுத்தன. அத்துடன் அமைப்புப் பணிகளில் ஈடுபடும் பெண்களை 'அடக்கமில்லாதவள்' என்று முத்திரை குத்திய சமூகத்திற்கு இவை மேலும் பலம் சேர்த்தன. குறிப்பாக, நன்கு திட்டமிடப்பட்ட வேலைத் திட்டங்களோ, அரசியல்மயப் படுத்தலோ இல்லாத கிராமப்புறத்து மக்கள் மத்தியில் இவை அதிருப்தியையே தோற்றுவித்தன. ஆகவே பெண்விடுதலை பற்றியும், ஒடுக்குமுறை பற்றியும் சரியான கருத்துத் தெளிவின்மையே இவ்வாறான நிலைமைகளுக்குக் காரணமாக அமைந்தன. இத்தவறுகள், அவர்கள் சார்ந்திருந்த அமைப்புகள் இவர்களைச் சரியாக வளர்த்தெடுப்பதில் விடப்பட்வையேயன்றி, அவர்களுடைய தனித்தவறுகளாகக் கொள்ளப்பட முடியாதவை.

பெண்கள், விடுதலை அமைப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆரம்பத்தில் பெண் ஒடுக்குமுறையின் வரலாறு பற்றி நடாத்தப்பட்ட கருத்தரங்கே பெண்கள் பிரச்சனை தொடர்பாக முதலும் இறுதியுமான கருத்தரங்காகும். தொடர்ந்து அமைப்பு வேலைகளில் ஈடுபடவும், அதன் கொள்கைகளுக்கு அமைவாகப் பிரசார வேலைகள் செய்யவுமே பெண்கள் வழிநடத்தப் பட்டனர். தேசிய விடுதலை இயக்கத்தில் பெண் பங்குபற்றுகிறாள் எனும்போதே அவள் விடுதலை பெற்றுவிடுவாள் என்று இவர்கள் கருதிவிட்டார்கள் போலும். மேலும் விடுதலை அமைப்புகளில் பணிபுரிந்த சக ஆண்களிடத்திலும் பெண்கள் பற்றி, அவர்களது திறமை, தகுதி பற்றிக் குறைவான மதிப்பீடே இருந்தது என்பது வருந்தத் தக்க உண்மை. இந்த உண்மையினை அந்தந்த அமைப்புகளில் இருந்த பெண்களும் உணரத் தவறிவிட்டார்கள். இவ்வாறான ஒரு சூழ்நிலையில், பெண்களுக்கெனப் பிரத்தியேகமான பிரச்சனைகள் உண்டென்பதோ, அதற்காக அவர்கள் ஓரணியில் திரட்டப்பட வேண்டும் என்பதோ கணக்கில் எடுக்கப்படவில்லை.

பெண்கள் தங்கள்மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக ஓரணியிலே திரளவேண்டும் என்ற கருத்து சில

www.tamilarangam.net

இடங்களில் இருந்து ஒலித்தாலும், துரதிர்ஷ்டவசமாக எங்களது விடுதலை இயக்கங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியான கொள்கை - நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தமையால், உருவான ஒருசில பொதுவான பெண்கள் அமைப்புகளும் அவற்றின் செயற்பாடுகளும் முழுமை அடையவில்லை என்றே கொள்ளவேண்டும். அத்தோடு பெண் என்ற ரீதியில் சமூகரீதியாகவும் தொழில் ரீதியாகவும் இரட்டை ஒடுக்குமுறைக்கு உள்ளான கிராமப்புறப் பெண்களை இந்த அமைப்புகள் புறக்கணித்துவிட்டன. கிராமியப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றிச் சஞ்சிகைகளில் எழுதியதோடு நின்றனவேயன்றி, போராட்ட சக்திகளான அவர்கள் மத்தியில் பணிபுரியவோ அவர்களை அணிதிரட்டவோ அவை தயாராக இருக்கவில்லை.

விடுதலை இயக்கங்களில் அங்கம் வகித்த பெண்கள், மகளிர் பிரிவென வேறுபடுத்தப்பட்டு இயங்கியபோதும் பெண்களது பிரச்சனைகள் அங்கே முக்கியத்துவம் பெறவில்லை. அத்தோடு விடுதலை அமைப்புகளில் இருந்த பெண்கள், அவர்கள் சார்ந்த அமைப்புகளில் இருந்தவர்களாலேயே பலவித ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப் பட்டார்கள்.

ஆனால் அந்த அமைப்புகள், அமைப்புரீதியிலான நடவடிக்கை எதையும் இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மேற்கொள்ளாமலும், இவ்வாறான ஒடுக்குமுறைகளை வெளிக்கொணராமலும் மூடிமறைத்துவிட்டன.

விடுதலை இயக்கங்களில் பெண்கள் இணையத் தொடங்கிய காலங்களில் புளொட்டினாலும், ஈபிஆர்எல்எஃப்பினாலுமே பெருமளவு பெண்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கழ். புளொட்டினால் மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படும் ஆனைவிழுந்தான், மணியந்தோட்டச் சம்பவங்கள் பற்றிய சரியான தகவல்கள் எதுவும் இன்றுவரை வெளிவராது அந்தப் புதைகுழிகளோடு புதையுண்டு போயின. கருவைச் சுமந்த உடல்களோடு புதையுண்டுபோன இந்தப் பெண்களுக்காகப் புளொட்டின் பெண்கள் அமைப்பு எந்தவித எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அத்துடன் ஏனைய பெண்கள் அமைப்புகளோ, சகவிடுதலை அமைப்புகளோ இதற்கெதிராய்க் குரல் கொடாது மௌனம் சாதித்தன.

*அடுப்போடு வாழ்நத் நெருப்புகள் நாங்கள்*
*எரிப்தற்காக எழுந்து வருகிறோம்*

என்ற சுலோகத்துடன் பெண்களைத் தனியொரு முன்னணியாக அமைத்து இயங்கிய ஈபிஆர்எல்எஃப்பினது மத்திய குழுவில் ஒரு பெண் உறுப்பினர்கூட இடம்பெறவில்லை. (இதேபோல் ஏனைய அமைப்புகளது உயர்மட்டக் குழுவிலும் பெண்கள் இடம்பெறவில்லை என்றே தெரிகிறது) இந்த அமைப்பினது உயர்குழுவில் உள்ள உறுப்பினர் ஒருதடவை, "இந்தப் பெண்களை ஒன்றாய்க் கூடி விவாதிக்கச் சொன்னால், ஒவ்வொன்றும் தங்களுக்குள் சொந்தக் காரணங்களுக்காக முரண்பட்டு ஒவ்வொரு பக்கமாக இருக்குதுகள், இதுகளையெல்லாம் அமைப்புகளில் சேர்த்து என்ன செய்வதென்று தெரியவில்லை" என்று தனது நண்பர்களுடன் சலித்துக் கொண்டார். கருத்து ரீதியான சரியான வழிகாட்டலை வழங்கத் தவறிய இவர்கள், தங்களது இவ்வாறான தவறுகளைப் பெண்கள்மீது சுமத்திவிட்டுச் சுலபமாய்த் தப்பித்துக் கொண்டனர். அத்தோடு காரைநகர் கடற்படைமுகாம் தாக்குதலில் பலியான ஷோபா என்ற கபண்போராளி எந்தவித ஆயுதப் பயிற்சியும் பெற்றிருக்கவில்லை என்பது அந்த அமைப்பின் உறுப்பினர்களாலேயே

www.tamilarangam.net

பேசப்பட்டது. தனது காதலன் அந்தத் தாக்குதலில் ஈடுபடுகிறான் என்பதாலேயே, எந்தவிதப் பயிற்சியும் இன்றி அவளும் அதில் பங்கெடுத்தாள். இறந்துபோன ஒரு பெண்போராளியைக் கொச்சைப் படுத்தும் நோக்கில் இது இங்கு குறிப்பிடப் படவில்லை. ஆனால் தனது காதலனுக்காக உயிரைவிடத் தயாரான ஒரு பெண்ணினது துணிவைத் தேசத்தினதும் அனைத்துப் பெண்களினதும் விடுதலைக்காகவும் அர்ப்பணிக்கும் வகையில் நெறிப்படுத்தாது விட்டது அவள் சார்ந்த அமைப்பினது தவறேயாகும். பெண்விடுதலைக்காகக் குரல் கொடுக்கிறோம் என்று முழங்கிய இந்த அமைப்பு தனது பெண் உறுப்பினர்களை எந்தளவிற்கு வளர்த்துள்ளது என்பதற்கு இது நல்ல உதாரணம்.

அதோடு, புலனாய்வுத் துறைப் பயிற்சிக்கென அழைக்கப்பட்ட பெண்கள் இந்தியாவில் இருந்த இவ்வமைப்பின் முகாமில் தங்கியிருந்தபோது, அவர்கள் ஒவ்வொருவரினதும் வேலைகள் பற்றி அவர்களுடன் கதைப்பதாகக் கூறி அவர்களைத் தனித்தனியாக அழைத்து உரையாடியபோது, அவர்களுடன் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டார் என இந்த அமைப்பின் உறுப்பினர் ஒருவர் பெண்களால் குற்றஞ் சாட்டப்பட்டார். பயிற்சிக்கென வந்திருந்த பெண்களுக்குப் பொறுப்பான பெண் ஒருவர், அவருக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும் எனக் கோரினார். ஆனால் அவர் எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தப் படாது வேறொரு முகாமுக்கு தண்டனைக் காலத்தைக் கழிக்கவேண்டி மாற்றப்பட்டார். வேடிக்கை என்னவெனில் அவர் மாற்றலாகிச் சென்ற முகாமும் இதே அமைப்பின் வேறொரு பெண்கள் முகாமே ஆகும். என்ன காரணத்தினாலோ இந்தப் பெண்களுக்குப் பொறுப்பாகச் சென்ற பெண் உறுப்பினர் பிற்பாடு, 'இது ஒரு தனிமனித பலவீனம்' என்றும், அதற்காக மரணதண்டனை வழங்குவது நியாயமற்றது என்றும் தனது கருத்தை மாற்றிக் கொண்டார். அந்த உறுப்பினர் எதுவித நடவடிக்கைக்கும் உள்ளாகாமல் தப்பித்துக் கொண்டார்.



(அடுத்த இதழிலும் வரும்)

---


# அகதிச் சிறுவர்கள்!


*நோர்வேயில் அரசியற் தஞ்சம் கோரி முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் 4,500 பேரில் 1,500பேர் சிறுவர்கள் (18 வயதுக்கு உட்பட்டோர்). இவர்களில் 1163 சிறுவர்கள் 'முன்னாள்' யூகோஸ்லாவியாவில் இருந்து வந்துள்ளனர்.*

*– தேவன் –*

www.tamilarangam.net





Far left: From Amsterdam, Netherlands. By MITCHELL.


Left: From Belgrade, Yugoslavia. By CORAX.

Below: From Dublin, Ireland. By TURNER.




© CARTOONISTS & WRITERS SYNDICATE

# கண்டு ரசித்தவை




**Tegning: DE ANGELIS, IL POPOLO, ROMA**

# கலையும் நிதியும்

– நித்தி

ஒரு நண்பர் கவலையும் பகிடியுமாய்ச் சொன்னார்: ''கோவிலிலை என்னைக் கண்டவுடனை சனமெல்லாம் ஓடுது. ஒருத்தரும் நிண்டு கதைக்கினமில்லை.'' நண்பரைக் கண்டு மக்கள் மருண்டோடக் காரணம், நண்பர் எந்தநாளும் ரிக்கற் விற்றுத் திரிவதுதான். கலை விழா, தமிழ் விழா, நாடகம், பரதநாட்டியம், டின்னர் டான்ஸ், மெல்லிசை, பொப்பிசை, றபிள், சினிமா நடிகர் வருகை, இராச் சாப்பாடு, கோயில்... என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும். நண்பருக்கோ எதற்கும் உதவும் நல்ல மனம். ரிக்கற்றுடன் நிற்பார். யாரைக் கண்டாலும் ''ஒரு ரிக்கற் எடுக்கிறியளோ?'' என்றுதான் பேச்சையே ஆரம்பிப்பார். வருடத்தில் தவறாமல் எல்லா நேரமும் ஏதாவது ஒன்று இருக்கும். நிகழ்ச்சிகளுக்குக் குறைவில்லை.

இன்னொரு நண்பர் நாடகத் துறை விற்பன்னர். மிகவும் உயர்ந்த தரமுள்ள நாடகங்களையெல்லாம் நெறியாள்கை செய்தவர். அவர் சொன்னார்: ''மாதக் கணக்காய் ஒத்திகைகள் நடத்தி, இரவு பகலாய்ப் பாடுபட்டு ஆயத்தங்கள் செய்து, ஹோல் புக் பண்ணி, சொந்தக் காசையெல்லாம் செலவழிச்சு, கடைசியிலை வீடு வீடாய்த் திரிஞ்சு ரிக்கற்றும் விற்றுத் திரியவேணுமென்றால் எங்களுக்கு உது தேவையில்லை. நான் பேசாமல் இருப்பன்.'' சொன்னார் போல் என்ன? பேசாமல் இருக்க அவரால் முடியாதென்பதும் உண்மை.

மற்றும் சிலரது பிரச்சினை வேறு. ''நல்லதொரு நாடகத்தைத் தயாரித்துவிட்டு 'ரிக்கற் வாங்குங்கள், வந்து பாருங்கள்' என்று கேட்டால் காசு யாருக்குப் போகிறது என்று கேட்கிறார்கள். நட்டம் வரக்கூடிய அளவுக்குக் குப்பை மலிவாய்ப் போட்டாலும் இதே கேள்விதான்.''

வீடு வீடாகவும், ஆள் ஆளாகவும் பிடித்து ரிக்கற் விற்பது தமிழர்களின் ஒரு 'பாரம்பரியம்' ஆகிவிட்டது. சொந்த நாட்டை விட்டு வளர்ச்சியடைந்த நாடுகளில் போய்க் குடியேறி வாழ்ந்த போதிலும், அங்கும் இந்நிலை மாறவில்லை. ஏனைய இனங்களைச் சேர்ந்தவர்கள் இதைச் செய்வதில்லை என்பதை நேரில் பார்த்த பின்னரும் எம்மில் மாற்றமில்லை. இதற்குக் காரணங்களும் உண்டு.

ஒரு குறிப்பிட்டளவு பணத்தை வைத்திருக்கும் ஒருவர் அதனைப் பலவழிகளில் செலவு செய்யலாம். உணவோ, உடையோ வாங்கலாம்; வீட்டுக்குச் சாமான் வாங்கலாம்; பிற்காலத்துக்கோ பிள்ளையின் 'சீதனத்துக்கோ' சேமிக்கலாம்; சுற்றுப் பயணம் போகலாம்; நாடகங்களும் பார்க்கலாம். ஒருவர் இதில் எதை அல்லது எவற்றைச் செய்கிறார் என்பது அவர் பெறும் திருப்தியைப் பொறுத்த விடயம். பணத்தைச் செலவுசெய்யும் போது நாங்கள் எப்பொழுதும் மாற்றாகப் பெறுவது 'திருப்திகளை'யே.

ஒரு நாடகத்துக்குப் போவதால் தமது பணத்துக்குரிய பெறுமதியைப் பெறலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தால்தான் ஒருவர் தாமாகவே நாடகம் பார்க்கப் போவார். அப்படி இல்லாத பட்சத்தில் அவருடைய தலையிலே போய் ஒரு ரிக்கற்றைக் 'கட்டிவிட' வேண்டிய தேவை ஒருவருக்கு ஏற்படுகிறது. அப்பொழுது அவர் ''இந்தக் காசு யாருக்குப் போகிறது?'', ''இந்த நிகழ்ச்சி எந்த நிதிக்கு?'' என்பன போன்ற கேள்விகளையெல்லாம் கேட்கிறார். இவற்றுக்கு நல்ல விடைகளைச் சொல்ல வேண்டிய கடப்பாடு ரிக்கற் விற்பவருடையதாகிறது. ஒரு கோயில் நிதிக்கோ, அகதிகள் நிதிக்கோ அல்லது அதுபோன்ற வேறு நிதிக்கோ என அவர் மறுமொழி சொல்கிறார்.

நிகழ்ச்சியைப் பார்க்கப் போன அன்பருக்கு, அது ரசிக்கக்கூடிய நல்ல நிகழ்ச்சியாக இருக்கும் பட்சத்தில், மிகுந்த திருப்தி ஏற்படுகின்றது. நிகழ்ச்சி சுமார் என்றால் ''சரி போகட்டும், நல்ல விடயத்துக்குத் தானே காசும் போகுது'' என்று தன்னைச் சமாதானம் செய்து கொள்ளக் கூடும். நிகழ்ச்சி மோசமாக இருக்கும்போது ''தலையிடியையும் விலைக்கு வாங்கி, நேரத்தையும் மண்ணாக்கியாச்சு. காசை மட்டும் கேட்டு வாங்கிக்கொண்டு ஆளை விட்டிருக்கலாம் தானே'' என்று திட்டிக் கொண்டு வெளியே வருகிறார். இப்படி வருபவரை இன்னொரு நாளில் இன்னொரு நிகழ்ச்சியில் கொண்டுபோய் இருத்துவது இலகுவானதா? இப்படியே நாலைந்து தரம் ஏமாந்த பிறகு அவர் ரிக்கெற்றைக் கண்டதும் வெருண்டோடுவதில் என்ன ஆச்சரியம்?

ஆகவே எமது சமூகத்தில் அரங்கக் கலைகளுக்கும் மக்களுக்குமிடையே ஒரு 'பிணைப்பு' ஏற்பட வேண்டுமானால் தரமில்லாமலும், அக்கறை எடுக்காமலும் நிகழ்ச்சிகள் தயாரித்து, அவற்றுக்கு 'நிதியுதவி' என்ற முலாம் பூசி மக்கள் தலையிலை கட்டியடிப்பதை நிறுத்த வேண்டும்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நல்ல நோக்கங்களுக்கு நிதி சேகரிப்பதற்காகக் கலை நிகழ்ச்சிகள் நடாத்துவதில் ஒரு பிழையுமில்லை என்பது மட்டுமல்ல; இது ஒரு நல்ல விஷயமும் ஆகும். ஆனால் இது துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு உரியதல்ல. சிலவேளைகளில், நோக்கத்தின் பாற் கொண்ட பற்றினால் அன்றி, வேறு காரணங்களுக்காக நிதிப் பெயரைப் பயன்படுத்தும் செயலைக் காண்கிறோம்.

'நிதியுதவி' நிகழ்ச்சிகள்கூட பண நஷ்டத்தில் முடிவதையும், மற்றும் சிலசந்தர்ப்பங்களில், சேர்த்ததில் முக்கால்வாசிக்குமேல் செலவாகிப் போவதையும் காணலாம். நல்ல கலை நிகழ்ச்சியொன்று தேறுமாயின், இதைப் பற்றியெல்லாம் கவலையில்லை. ஆனால் காசும் மிஞ்சாமல் கலையும் மிஞ்சாமல் போகும்போது இதெல்லாம் எதற்காக என்ற கேள்விக்கு இடமேற்படுகிறது. பொறுப்பற்றும் சிறுபிள்ளைத் தனமானதுமான செயற்பாடுகளை மக்களிடையே கொண்டுசென்று விற்க ஒரு முத்திரையாக அகதிகளையும், கோயில்களையும் பயன்படுத்துவது கண்டிக்கப்பட வேண்டியது.

எனவே, நல்ல நிகழ்ச்சிகளை – அவை நிதியுதவிக்காக நடக்கிறதோ இல்லையோ – மக்கள் தாமாகவே முன்வந்து போய்ப் பார்க்கும் நிலை உருவாக வேண்டும். கலைஞர்களிடமிருந்து தாத்தினை மக்கள் உரத்துக் கோரவேண்டும். பார்வையாளர்களை அவமதிப்பது போன்ற நிகழ்ச்சிகளை நிதிக்காகவும் நடத்தக் கூடாது●




– Vi får håpe den har humoristisk sans...

வாழ்க்கையிலே வசந்தங்கள் வந்து போனதை அவன் மறந்துவிட்டான். இன்னுமொரு வசந்தத்துக்காக காத்திருக்க முடியாது. இப்போதைய உலகமே உலகம் எனும் தத்துவத்துக்கு ஆட்பட்டு... எவரிடமும் சண்டையிடும் மனோபாவத்துடன் வாழும் வாழ்க்கை எப்படியோ பிடித்திருந்தது அவனுக்கு.

கையில் ஒரு அழகிய 'நாவலுடன்'... அருகில் ஒரு அழகிய அல்லது புரிந்துகொள்ளக்கூடிய பெண்ணுடன்... எப்படியோ மனதுக்குப் பிடித்த ஒன்றுடன்... நடந்துகொண்டு... கையையும் கையையும் உரசியபடி, அல்லது கோர்த்துக் கொண்டு...

## விரைவில்
## க.ஆதவனின்

# 'மண்மனம்' இரண்டாம் பாகம் ஆரம்பமாகிறது.

(சுவடுகளில் வெளியாகிப் பெரும் வரவேற்பைப் பெற்ற முதற்பாகத்தின் தொடர்ச்சி)

www.tamilarangam.net

www.tamilarangam.net

சுழல்

• கி.பி. அரவிந்தன்

1.
சிம்னி விளக்கில்
சட்டியை துழாவி
அம்மா
சொதி விடுவாள்.

சோறும் சொதியும்
பிசைந்த குழையலாய்
கசியும் சொற்கள்.

ஐயாதான் சொல்வார்
'எனது கஸ்டம்
என்னோட போகட்டும்....'
பார்வையில் ஒழுகும்
மீதி......

'அவங்களுக்காய்த்தானே
சாமத்தோட
நெருப்பில வேகிறன்....'

ஒத்தூதினாளா?
நெக்குருகினாளா?
நொய்ந்தவள்
அம்மா.

புகை அடைந்து
கரிபடர்ந்த
ஓலைக்கூரை.
எரிந்த கொள்ளிகளில்
பழுத்திருக்கும்
நெருப்பு.
மெல்லத்தான் பூக்கும்
சாம்பல்
அடுப்புக்குள்.

பரீட்சையில்
தேறவில்லையானால்
மனித ஜாதியா
பூச்சி
புழு
அதற்கும் கீழ்......

2.
எழுத்துண்ணும்
கிறக்கத்தில்
கண்ணயர்ந்தால்......

சீமெந்து கலவைக்கு
மண்சுமந்த
முதுகுவலியிலோ,

இயந்திரப் படகை
கடலுள் தள்ளிய
நாரிப்பிடிப்பாலோ,

உயர உயரமாய்
மரமேறி இறங்கிய
கால்கடுப்பிலோ,

தோட்ட வெள்யில்
குழைதாட்டு சோர்ந்த
வெயில் வேகாரத்திலோ,

'இவன்களை நல்லா
படிக்கச் சொல்லு....'
வாய்ப்புலம்பலோ!
அம்மாதான்
அணைத்திருப்பாளோ!
முனகலை மூடாத
இருள் போர்வை.

பாயில்
தலையணையில்
ஜம்பொறித்

துவாரங்களில்
ஊரும், அரிக்கும்
புத்தக பூச்சிகள்.

அச்செழுத்தும், இலக்கமும்
மலக்குழியிலும்.
எல்லாம், எல்லாம்
பட்டத்தில் தொங்கி
காற்றில் மிதவென....

3.
காற்றெனைக் கைவிட்ட
அக்கரைப் பச்சையிலே
உங்களைத்தான்
நினைத்திருக்கேன்
ஐயாவே.

நீர்பட்ட துன்பங்களை
எந்தனுக்கு தாமறுத்தீர்
அத்துன்பம் தொலையுமென்றா
பட்டத்தில்
தொங்கவைத்தீர்
வானில் என்னை
ஏற்றிவிட்டீர்.

இங்கென்
காலநிலை
மாறியது.

மலிஞ்ச
அடிச்சு
பொலி
உறிஞ்சி
தோல்
சுளைய
முழுங்
ஐயாவே
வெளி
ரூபா
உயா
வெ
இ
கு

www.tamilarangam.net

ொலைந்தது
ன்

லியாய்
ாடுக்கிறேன்
கூலியை
கொள்கிறான்.
ருக்க
லோ
கிறான்.

சொல்லாதீர்
ல் அளக்கும்
ட்டமும்
ளையர் தேச
மகிமையும்
ஞ்சு போயிரும்.

லக்கார அடிமையாய்
ட்டக்காட்டு
ளைபிடித்த
ரிய வளவு
ண்டையெல்லாம்
டிமை, தொழுமை
லிகளாய்....

தாள்களும்
சூழல்கின்றது......

## வெளிநாட்டில் வளரும் எமது பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**Date: Sunday 2 January 1994**
**Venue: Monash University, Clayton**


வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது பாரம்பரிய கலாசாரத்தை அந்நிய நாட்டு சூழ்நிலையில் பேணும் முயற்சியின் போது பல இடையூறுகளை எதிர்நோக்குகிறார்கள். இந்நாடுகளில் வளரும் பிள்ளைகள் இந்நாட்டுப் பழக்க வழக்கங்களையே பெரும்பாலும் பின்பற்றுகிறார்கள். இவற்றில் பெரும்பாலானவை நமது பாரம்பரிய கலாசாரத்திற்கு முரண்பாடானவை எனப் பல பெற்றோர்கள் கருதுகிறார்கள். அதே வேளையில், இந்நாட்டுச் சுற்றாடலில் வளரும் பிள்ளைகள் தமது பெற்றோர்களின் பழக்க வழக்கங்களும், எதிர்பார்ப்புக்களும் இந்நாட்டு நடைமுறைக்கு ஒவ்வாதவை என குறைப்படுகிறார்கள். இம்மாதிரியான பிரச்சினைகள் வெளிநாடுகளில் குடியேறி வாழும் மக்களுக்குப் புதியவை அல்ல. அவர்கள் பல வழிகளில் இப்பிரச்சினைகளை சமாளித்து வருகிறார்கள்.

இம்மாதிரியான விடயங்கள் பற்றிச் சிந்திக்கும் போது, இந்நாட்டில் ஒருவன் தன்னைத் தமிழன் என்று சொல்வதற்கு வேண்டிய அடிப்படைப் பண்புகள் யாவை என்ற பெரும் கேள்வி எழுகின்றது. அத்துடன் நாங்கள் பேண முயற்சிப்பது என்ன என்பதும், ஏன் முயற்சிக்கிறோம் என்பதற்கான காரணங்களும் தெளிவாக ஆராயப்பட வேண்டும். கட்டாயம் பேணப்பட வேண்டிய பாரம்பரியங்கள் யாவை? எவ்வகையான பாரம்பரியங்களை நாங்கள் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்? நம்மால் பேணக்கூடியவை எவை? இது சம்பந்தமான உங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் மெல்பன் கலை வட்டத்தினர் தாம் வரும் தைமாதம் இரண்டாம் திகதி மெல்பனில் ஒழுங்கு செய்யும் கருத்தரங்கில் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். உதாரணமாக, பின்வருவன ஆலோசிக்கப் படக்கூடிய சில விடயங்கள் ஆகும்.

- *நிற, இன வேறுபாடுகளின் தாக்கங்கள்.*
- *இளந் தலைமுறையினர் மீதான பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளுக்கும், சமூக நிர்ப்பந்தங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள்.*
- *இளந் தலைமுறையினர் எடுத்துக்காட்டாக பின்பற்றக் கூடியவர்கள் யார்?*
- *அடுத்த சந்ததியினருக்கு அர்த்தம் தரக்கூடிய தமிழர் தனித்துவ அம்சங்கள்.*
- *பெற்றோர்களால் நிச்சயிக்கப் படும் திருமணங்கள் முதலிய மரபுகள்.*
- *எதிர்காலத் தலை முறையினருக்கு தமிழ் மொழி, வரலாறு, சமய சரித்திரங்களை புகட்டும் வழிவகைகள்.*

இந்தக் கருத்தரங்கில் சமுதாயத்தின் எல்லாப் பகுதியினரும் குறிப்பாக இளம் தலைமுறையினர் உட்பட பங்கு கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. ஆக்கங்கள் 10 - 20 நிமிட கால எல்லைக்கு உட்பட்டனவையாய் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ உலகின் பல பாகங்களிலிருந்தும் எதிர்பார்க்கப் படுகின்றன. ஆக்கங்கள் சமர்ப்பிக்க விரும்புவோர் எம்முடம் உடனே தொடர்பு கொள்ளவும். அத்துடன், ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் உங்கள் ஆக்கங்களின் சாராம்சத்தை மட்டும் எழுதி பின்வரும் முகவரிக்கு வரும் ஐப்பசி மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

Melbourne Kalai Vattam
P.O. Box 113, Clayton, Victoria 3168
Australia.



மெல்லிய குளிர்காற்று சில்லென்று
உடலைத் தழுவி......
மூக்குத் துவாரத்தில் - மெல்லிய
புழுதி மணமும்கூட...!
கதிரவனை எங்கோ கண்டுவிட்ட
காக்கைகள்,
பள்ளியெழுச்சி பாடின..!
ஒற்றை மரத்துக் குயிலொன்று,
உச்சஸ்தாயியில் கவிபாட,
அவையும் எனது செவிப்பறையில்
வந்துமோதின!
நித்திராதேவி கையுழைந்து
நினைவுத்தேவி கரம்நீட்ட...
விழியிமை மெல்லத் திறந்து
சிறைக் கூடத்தினுள்ளும்
ஒளி பாய்ந்தது....!
ஜன்னல் கம்பிகள் - அங்கு
கேள்விக்குறியாகிப் போயின!

நோர்வேயில் காக்கைக்கும், குயிலிற்கும், கம்பிக்கும் யார் கடவுச்சீட்டுக் கொடுத்தது? முகம் கவிழப் படுத்ததனால் நெஞ்சில் வடுவிழைத்த புற்பாய், இது கனவல்ல எனப் பறைசாற்றியது. கிள்ளிப் பார்த்தேன், வலித்தது. கையைத் தள்ளிப் போட்டேன், குளிர்ந்தது....! ஆம்..! "நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி, புல்லுக்குமாங்கே பொசியுமாம்" என்பதைப் போல் "வாழைக்கிறைத்த நீர் செம்மண் நனைத்து, சீமெந்துக் கட்டிடமும் குளிர்கின்றது" இது எனது ஊரின் தனித்துவம்!

....ஆம்!
உழைத்துக் களைத்து
ஒரு சொட்டு நீர்.... பருகி
இதயத்துள் தாங்கிக்கொண்டு - இன்று
நானும் - எனது
அன்னையின் மடியில்.....!

நீண்ட நேரம் படுத்துக் கிடக்க விரும்பாது உடலை மூடிக்கிடந்த அம்மாவின் மெல்லிய பழைய சேலையே உதறிவிட்டு, நோர்வேயின் அந்தத் தடித்த, கனத்த போர்வையை ஒருகணம் எள்ளிநகையாடி, வெள்ளை உடை மை போர்த்திக் காவலுக்கு நின்றிருந்த கம்பிகளைப் பார்த்தேன். வெள்ளை நிறம் கண்டதும் கால்கள் சறுக்குவது போல் ஓர் உணர்வு, இது எனது நாடு என்ற எண்ணத்தில் அடிபட்டுப் போயிற்று....!

கம்பிகளில் முகம் புதைத்து
கன்னங்களில் குளிர் வாங்கி
காற்றோடு வந்த

www.tamilarangam.net


புற்பாய் தரை விரித்து
வெப்பமான தலையணையை
வேண்டாம் என ஒதுக்கி
கன்னச் சதைகள்
நிலத்தில் படர... எனது
அன்னை பூமியை
அரவணைத்துப் படுக்கையில்
ஒரு சுகம்...அது
எனது ஊரின் தனித்துவம்!

இது நோர்வேயல்ல என்பது எனக்கு நன்றாகவே புரிநத்து. புழுதி மணத்தை மூக்கில் கொண்டு புழுதி அளைந்து; வாழை மா என்று தோப்புகளூடே எம்ஜியார், நம்பியார் சண்டை போட்டு, எப்படியோ எனது உப்புச் சுவறும் அந்த வேர்வையை அந்த நன்னீரில் கலந்து, மண்ணிற்கு உரமாக்கி, இளமைக் காலங்களை அங்கு வளர்த்து, அந்த மண் தந்த வளங்களில் உரமாகி இளைஞனாகி, அந்நிய மண்ணில் மாணவனாக அறிமுகமாகி..... இன்று மீண்டும் எனது அன்னையின் மடியில் எனது கன்னச் சதைகள்....! புழுங்கிக் கிடந்த நினைவுகளுக்கு ஓர் ஒத்தடம்! எனது இதயத் துடிப்பு அன்னைக்கு நன்றாகவே கேட்டிருக்க வேண்டும். அவள் அமைதியாகவே இருந்தாள்.

அந்நிய மொழியில்.. ஒரு
நுண்ணிய ஒலியிற்கு
நிபுணத்துவம்....!
கூக்குரலிடும் எனது
உணர்வுகளுக்கு
அர்த்தம் புரியாது.
அறுபது வயதுக் கிழவன் - எனது
அப்பாவாகி...
எதிர்பார்ப்புகளை

வாழைப் பொத்தியின்
மணம் நுகர்ந்து
பனியில் நனைந்து நின்ற
புற்கள் விட்ட
சுவாசத்தினை - எனது
மூக்குத் துவாரங்களில்
சிறைசெய்து
எட்டுமணிக் கதிரவனைப்போல்
கண்விரித்து
காலைப் பொழுது தந்த
போதையில்
மெய்மறந்தேன்...!

பனித்துளிகளைத் தாங்கஇயலாது தலைகுனிந்திருந்த புற்கள், கதிரவனின் ஒளிபட்டுக் கர்ப்பிணிப் பெண்ணைப்போல நாணப் புன்னகை செய்தன. நீராகாரத்தை நிறைய உண்ட வாழைகள் தலையசைத்து தம் நன்றிகளைக் கூறிக்கொண்டன. வேலிஓரம் நின்றிருந்த செவ்வரத்தையில் ஒரு கரிக்குருவி, இலைகளில்



www.tamilarangam.net

www.tamilarangam.net

ஒட்டாது நின்ற நீர்த்துளிகளை உறிஞ்சிக் குடித்தது! வேலிஓரம் படம்பிடித்த விழிகள் வேலியையும் தாண்டிச் சென்றன. எனது வீட்டில் இல்லாத மாற்றம் பர்வதம் மாமியின் வீட்டில் தெரிந்தது. காய்களின் கனத்தைத் தாங்க இயலாது வளைந்து கிடந்த கொய்யா மரக்கிளைகள், அணில்களின் படையெடுப்பைத் தாங்க இயலாது உதிர்கின்ற முருங்கைப் பூக்கள், கண்களுக்குத் தெரியாது கனிகளை கடலைச் சுருள்களுள் போர்த்த மாதுளை.....! அழகே அழகு!

ஆம்! அந்த் விளைச்சல்கள் எவ்வளவோ அமைதியாக பாதுகாப்பாக, உரிமைதாரரை எதிர்பார்த்த வண்ணம் இறுமாப்புடன் விளைந்து கிடந்தது. முன்பெல்லாம் பர்வதம் மாமியின் வரும்படிகளுக்கு நான் ஒரு எதிரி. பர்வதம் மாமி கண்ணயரும் வேளைகளில் வேலியில் இரண்டு மட்டை கழற்றி, எனது சிற்றுடம்பை அதில் புகுத்தி, பர்வதம் மாமியின் வரும்படிகளை எனது வயிற்றில் நிரப்பி... ஆம்! இப்போது பர்வதம் மாமிக்கு நிம்மதி!

பர்வதம் மாமி வீட்டு முன்விறாந்தையில் ஈரம்படாது அடுக்கியிருந்த விறகுகளின்மேல் ஒரு நாய்க்குட்டி உறங்கிக் கிடந்தது. எங்கிருந்தோ ஓடிவந்த ஒரு பெட்டைக் கோழி பீச்-சென்று மாமி வீட்டுப்படியை அசுத்தம் செய்து ஓடியது. சத்தம் கேட்டு விழித்த குட்டிநாய் ஓடி அசுத்தத்தை முகர்ந்து பார்க்க, பர்வதம் மாமியின் கைவிறகு நாய்க்குட்டியின் இடுப்பைப் பதம் பார்த்தது. வீலென்று ஓடிய நாய்க்குட்டியை விட்டு, "எனக்கு வந்து வாய்ச்சதெல்லாம் இப்பிடித்தான்" எனவிடிந்ததும் விடியாததுமாய் அலுத்துக் கொண்டாள் மாமி. மாமியைப் பார்த்தேன். வாழ்க்கைப் போராட்டத்தில் பட்ட வடுக்கள், கைகளின் மெலிவில் தெரிந்தது. ஆனால் அவள் ஈட்டிய வெற்றிகள் அந்த நிலத்தின் விளைச்சல்களில் தெரிந்தது. ஓடிக்கிடந்த நினைவதனை பர்வதம் மாமியின் வீட்டுப் படியதனில் திடீரெனப் பூத்த ஒரு மெல்லக் கிணற்றுக்கட்டைத் தொட்டு, ஓடி, எட்டிப்பார்த்து, அதனுடன் அறிமுகமாகி, அது அவ்வளவு பயங்கரமானதல்ல என அறிந்து, அதனுடன் நட்புக் கொண்டு, அதிகாலையில் துலாவின் கணம் இழுத்து வியர்த்து, வியர்வையை நீரில் கழுவி, எப்படியோ எனது இளமை நினைவுகளில் பதிந்துவிட்ட கிணறு மட்டும் அங்கிருந்தது. துலா உக்கிப்போய்.... இத்துப்போன மரங்களில் தொங்கிக் கிடந்தது. இருபதாம் நூற்றாண்டின் வளர்ச்சியை எண்ணி அழுகிறது போலும்! எனக்கும் அழுகை வந்தது. ஆம், பக்கத்துவீட்டுக் கொய்யா பூத்துக் குலுங்குகிறது, எனது வீட்டுத் துலா தூர்ந்து கிடக்கின்றது. எனது வளர்ச்சியை எண்ணி நானும் அழுதேன்.

கதிரவன் சினக்கத் தொடங்கினான். அவனது சினத்தைத் தாங்கவியலாது எனது வியர்வைச் சுரப்பிகள் அழுதன. நேரம் பத்துமணி. இப்போது நோர்வேயில் நேரம்..... நினைக்கவே வெறுப்பாக இருந்தது. வாயில் ஒருவகைப் புளிப்புத்தனம். உமிழ்நீர் ஊறிக்கொன்றிருந்தது. ஆம், புரிந்துகொண்டேன். நாக்கு ஒரு ‘தம்’மிற்கு (சிகரெற்) ஏங்குகிறது என்று. அப்பாவிடம் ஒரு சாக்குச் சொல்லி சைக்கிளையும் கடன்வாங்கிப் புறப்பட்டேன். ஊர் மிகவும் மாறிப்போய் இருந்தது. தோற்றத்தில் மட்டுமல்ல குணத்திலும்தான். எனது அட்டகாசத்திற்குப் பயந்தோடியவர்கள், இன்றும் பயந்து விலகினார்கள் எனது பட்டத்திற்காக. அவர்களுக்குப் புரியவில்லை நான் தம்மடிக்கப் போகிறேன் என்று. வீதி நெடுகலும் புதிய முகங்கள் கேள்விக்குறியாக விலத்திப் போயின. ரட்ணம் மாஸ்டரும் ரெட்டைச் சிரிப்புடன் விலத்திப் போக, கூத்தியவத்தைப் பிள்ளையார் கோயில் எனது விழிகளில் வியப்புடன்....! பச்சைப் பசேல் என்று நெற்கதிர்கள். விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலே எமக்கு உரமும் நீரும் கிடைக்கின்றன என்பதைப் பறைசாற்றின. அவையும் வெளிநாட்டு உரத்தில்தான் வளர்கின்றன என்பதைப்


www.tamilarangam.net

பருவச்சிட்டு வழிமறித்தாள். தலைக்குமேல் கிடந்த தகரத்தில் ஒரு குரும்பட்டி விழுந்ததைப் போல் ஒரு அதிர்ச்சி. ஆம்! பர்வதம் மாமி செல்லமாகக் கூப்பிடும் ராசாத்திதான் அவள். எப்படி எப்படி.... இதற்குள் இப்படி? என்னைக் காட்டிக் கொடுக்கும் அதே ராசாத்திதான். இன்று ரோசாவைப் போலப் பூத்திருந்தாள். இளமையின் வனப்புகளை எளிமையான உடைகளால் மறைத்து, கழுத்தளவில் கிடந்த கூந்தலை இடுப்பளவில் வளர்த்து, அலுப்பை ஒரு நெட்டையாக வாசற்படியில் முறித்து மறைந்தாள். மின்னல் வெட்டி மறைந்ததுபோல் கண்கள் கூசியது. எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றியதுபோல், நெஞ்சின் மூலையில் கிடந்த கிராமியக் கொள்கைகள் கொழுந்துவிட்டெரியத் தொடங்கின. இன்னொரு மின்னலுக்காய் கண்கள் காத்துக் கிடந்தபோது அப்பாவின் வறண்ட குரல் என்னை நினைவிற்குக் கொண்டுவந்தது. தரையில் கிடந்த புற்பாயைச் சுருட்டி மூலையில் வைத்துவிட்டு, கிணற்றடியை நோக்கி விரைந்தேன், கையில் கரிக்கட்டையுடன்.

மின்சார மோட்டரொன்று முனகி, நீண்ட குழாய்விழயே நீர் உறிஞ்சி, அகன்ற தொட்டியதில் கக்கியபடி....! துலா தூர்ந்து போனதால், கிணற்றடி இப்போது தடை செய்யப்பட்ட பிரதேசம். கிணற்றுக் கட்டில் எனது உடற்பாரத்தைப் போட்டு, கரிக்கட்டியை மென்று, ஆட்காட்டி விரலை வாயினுள் நுழைத்து, அங்குமிங்குமாக அசைத்தபோது கரிக்கட்டியின் காரம் நாக்கைச் சுட்டது. உக்கி வளைந்த துலா என்னைக் காப்பாற்ற யாருமில்லையே என்பதைப் போல், ஒரு ஒற்றைக் காக்கையைத் தலையில் தாங்கி, இத்துப்போன பூவரசுக் கட்டைகளின் மேல் தொங்கிக் கிடந்தது!

இந்தக் கிணற்றுக் கட்டில் அமர உரிமையில்லாத பருவம். அப்பா அயர்ந்திருக்கும் வேளைகளில் "கிணறு விழுங்கிவிடும், பூதம் இருக்கிறது" என்ற அப்பாவின் அசரீரியைக் காதில் வாங்கி, புரியாது என்னைப் பார்த்துத் தலையாட்டிச் சிரித்தன. இன்றும் பச்சையாக....... பிள்ளையார் கோயில் மட்டும் மாறவேயில்லை. அதே ஆலமரங்களும் பிள்ளையாருக்கு குடைபிடித்த வண்ணம். ஆனால் புதிய சோடிகள் மட்டும் அங்கு புதிதாகக் கூடியிருந்தார்கள், புதிதாக வந்த என்னை அச்சத்துடன் பார்த்து....! சைக்கிளை மரத்தடியில் சாத்திவிட்டு, பிள்ளையாரையும் ஒருமுறை எட்டிப் பார்த்துக் கொண்டேன். பிள்ளையார் லிவைசா (Levi's), பட்டா கட்டியிருக்கிறார் என்பதைப் பார்ப்பதற்காக அல்ல, பக்தியினால்தான். ஆச்சரியம்..... அவர் அம்மணமாக இருந்தார். ஓரமாக ஒதுங்கி, ஒரு



பிறிஸ்டலின் முனையில் நெருப்பூட்டி, ஆழமாக இழுத்து, அதன் காரத்தை உணர்ந்துகொணட்போது, பழைய நினைவுகள்.... பழைய நட்புகள் இந்த முப்பதில் அசைந்தாடியது.

பத்துப்பேரைத் தாங்குவேன் என்று இறுமாப்புடன் வளைந்து, வளர்ந்து கிடந்த அரசமரக் கிளையொன்று, இன்றும் இறுமாப்புடன் இளமையும் கொண்டு.....! அதனருகில் சென்று ஒரு சின்ன ஆராய்ச்சி, எனது இளமைப்பருவத்தில் அதில் வெட்டிவைத்த பெயர்கள் இன்னும் இருக்கின்றனவா என்று. ஆம்! "இன்பகுரு - இன்பவதி" இன்றும் இளமையாகவே.... வாழ்க்கையின் பொய்மையான பகுதிகளை மனது சுவைபார்க்க எரிந்துமுடிந்த சிகரெட் விரல் இடுக்கில் சுட்டது. நினைவுக்குத் திரும்பிய நான், புதிய ஜோடிகளை ஒரு புன்னகையின் துணைகொண்டு ஆசீர்வதித்துப் புறப்பட்டபோது, புன்னகையின் அர்த்தம் புரியாத அந்த ஜோடிகள் மீண்டும் தமது சந்தோஷத்தில்....

கதிரவன் மலர்ந்தான், மறைந்தான். நாட்கள் ஓடின. உணர்ச்சிகளுடன் எனது வாழ்க்கையும் கூடத்தான்..... சாதகமும் ஓடிற்று சம்பிரதாய முறையுடன். பக்கத்துவீட்டுப் பர்வதம் மாமி எனக்குப் பர்மனன்ட் (permanent) மாமியாக சாதகம் சம்பியன்ஷிப் (championship) பெற்றுவிட்டது. காட்டிக்கொடுக்கும் ராசாத்தி எனக்கு ராசாத்தியாக.....! பனைமட்டை வேலியில் நான் கழற்றிய இரண்டு மட்டையைவிட இரண்டு மட்டை கூடவே கழன்று உறவு இறுகியது. கொய்யாவும், மாதுளையும் நான்தான் அவர்களது உரிமையாளன் போலப் பூத்துக் கிடந்தது வேலி ஓரம். குட்டிநாய் நட்புடன் குலைத்தது. இப்போதெல்லாம் பர்வதம் மாமியின் செல்ல ராசாத்தி அலட்சியமாக அலுப்பு முறிப்பதில்லை. அதுவும் நாகரீகத்துடன் அடிக்கடி முறிந்தது. மின்னல் வெட்டியது, மறையவில்லை. எரிந்துகொண்டிருந்தது. கண்கள் கூசவில்லை, களைத்துப்



www.tamilarangam.net

www.tamilarangam.net

போய்விட்டது. ஆனால் துலா மட்டும் இத்துப்போன பூவரசில் இன்னும் தொங்கிக் கிடந்தது.

இன்றும் நான் எனது அன்னையின் மடியில் கன்னம் புதைத்துப் படுத்திருந்தேன். எனது உணர்வுகள் அவள் உணர்வுகளுடன் சங்கமம். ஆனால் வழமைபோல அவள் இன்றும் மௌனமாகவே இருந்தாள். புழுதி மணத்தது, கரிக்குருவி நீர் குடித்தது, பெட்டைக்கோழி விறாந்தையில் பீச்சியது, குட்டிநாய் மோப்பம் பிடித்தது, பார்வதம் மாமி வழமைபோல அடித்தாள். செல்ல ராசாத்தி மட்டும் நாகரீகமாய் அலுப்பு முறித்தாள். காலை ஏழு மணியில் பேச்சுக் குரல்கள். சிற்றம்பல மாமாவுடன் அப்பாவின் சீதனக் கெடுபிடிகள். நான் களவாகத் தின்ற கொய்யா நாளை கொழுத்த சீதனத்துடன்..... பேச்சு முடிவாயிற்று. சிற்றம்பலம் அங்கலாய்த்தார் வெளிநாட்டு சிற்றிசனுக்கு. அப்பாவும் சம்மதித்தார் வேண்டிய சீதனத்துக்கு. பலியாடாய் படுத்துக் கிடந்தேன், அப்பாவின் இம்சைகளுக்காக. நினைவுகள் தறிகெட்டுப் பாய்ந்தன. நோர்வேயும், காற்றில்லாத அறைகளும், முகத்தில் ஊசிபோடும் குளிர்காற்றும், சறுக்குகின்ற பாதைகளும் வாழ்க்கையே பூச்சியம் என்றன. பனிப்புல்லும், காலைக் கதிரவனும், வேலியோரச் செவ்வரத்தையும், கரிக்குருவிகளும் நான் உனக்குச் சொந்தமில்லை என்றன. நான் ரஸிக்கும் காலைப்பொழுது எனக்காகக் காத்துக் கிடந்தது. ரசனையேயில்லாது நான் முகம் கவிழப் படுத்துக் கிடந்தேன்.

கதிரவனின் வெப்பக் கதிர்கள் முதுகில் கோலம் போட்டன. வியர்வைச் சுரப்பிகள் அழுது முதுகுவழியே ஓடிய இருதுளிகள் இடுப்பில் கீச்சமூட்டின. தண்ணிச் சரவணை பத்துமணியில் பாட்டோடு றோட்டில். சொந்த நாட்டில் சுதந்திரமாகப் பாடினான் பாகவதர் பாட்டொன்றை. ஏழுமலை வீட்டில் கள்ளு வியாபாரம் களைகட்டி விட்டது. சில்லென்று வந்த பனைவடலிக் காற்றோடு லேசான கள்ளுமணமும்கூட. சைக்கிளை வேலிஓரம் சாத்தி, பனைமட்டைப் படலைதள்ளி நானும் ஒரு வாடிக்கையாளனாக உள்ளே நுழைந்தபோது, கேள்விக்குறியோடு சில கிழடுகள். ஏழுமலை எனக்காகப் போட்ட கதிரையினைத் தவிர்த்து, அங்கிருந்த பனங்குற்றியொன்றில் குந்திக்கொள்கிறேன். முதலில் கரடுமுரடாக கஷ்டமாக, பிறகு அறிமுகமாகி வசதியாகப் போய்விட்டது. வந்தது அது வெள்ளையாக, ஒரு பனைஓலைப் புழாவில். முகர்ந்தேன், அது அதற்குரிய வாசனையுடன். மூக்குவழியே புகுந்து சிரசுவரை ஏறி சில பழசுகளை நினைவூட்டியது. முதலில் இனித்து.... புளித்து.... பின்பு நாக்கு அதன் சுவையுடன் அறிமுகமாகியபோது சாதுவாக வெறியேறி சரவணைபோல் பாட ஆசை வந்தது. போதும் என்ற மனத்துடன் சைக்கிளை உருட்டி ஓடி வீடுவந்து சேர்ந்தபோது.... எரிக்கும் கண்களுடன் வீட்டு வாசலில் அப்பா! குடித்த கள்ளு செமிக்கும்முன்பு செய்தி வீட்டு வாசலில்... இதுவும் எனது ஊரின் தனித்துவம்.

அந்திப் பொழுதின் அமைதியான வரவுகண்டு ஒற்றைமரத்துக் குயிலது முகாரி பாடியது. வாடிவிழுந்த செவ்வரத்தை சிற்றெறும்புகளின் பிடியில், ஓடிவந்த நீரலைகள் அவற்றை இழுத்துக்கொண்டு வாழையின் அடியில். நாலுமட்டை கழன்ற வேலியருகில் மாமிவீட்டுக் குட்டிநாய் குலைத்தது, நட்புடன்தான். நிமிர்ந்து பார்த்தேன். ராசாத்தி அங்கு நின்றிருந்தாள். ஆம், அப்பாவின் இன்றைய மகாலட்சுமி. விழிகளில் கேள்விக்குறிகள்... விடைகளை எதிர்பார்த்து, எளிமையான உடையிழந்து, அதன் அழகிழந்து, ஆனால் இன்னும் நீண்ட கூந்தலுடன். நாளைய

எனது நாயகி இன்றைய கேள்விகளுடன் வேலியோரம் .... காலைக் கள்ளுக்கதை காதில் விழுந்ததாம். வேலியோரத்து அறிவுரை விளக்கம் சொன்னது. நாளை என் பெயருக்கு மாறப்போகும் காணி உறுதிக்காக இன்று எனது காதுகள் இரவல் போயின. தண்ணிச் சரவணை பின்னேரக் கள்ளுடன் பாடத் தொடங்கிவிட்டான்.... சுதந்திரமாக.

ஊர்கூடிப் பலகாரம்சுட்டு, பொன் உருக்கித் தாலிசெய்து, பதிவாளர் கையில் பலரூபாய் வைத்து, சிற்றம்பலம் வாரிசு திருமதிப் பட்டம் பெற்று, சீர்வரிசைச் சாட்சியில் சட்டத் திருமணம் முடித்து, விற்றுப்போன வாழ்வதில் மாப்பிள்ளைப் பட்டம் எனக்கு.


குருக்களார் குடும்பி ஒய்யாரமாட, நட்டுவனார் மேளம் மங்கலம் பாட, கல்யாணக் காஞ்சிபுரத்தில் கொய்யாத்தோட்ட ராசாத்தி...., குந்தியிருந்தாள் என்னருகில்! குருக்களார் குடும்பி ஆட, கொட்டுமேளம் இறுக்கிக் கொட்ட, கட்டினேன் தாலி, ராசாத்தி கழுத்தில்தான். சீதனப்பெருநையை சிற்றம்பலம் அளக்க, அப்பாவின் கவலையோ கொய்யாப்பூ கொட்டுதென்று. நல்லவேளை ராசாத்தி எனக்குத் தாலி கட்டவில்லை. அதுவரையில் கலாச்சாரக் கல்யாணம் அங்கு முறையுடன்தான்.

இன்று நான் ராசாத்தி வீட்டில். குட்டிநாயோ அதே விறகுக் கட்டில். ஓடிவந்த பெட்டைக் கோழியோ அதே படியில். அலுப்பு முறித்த ராசாத்தியோ எனது அருகில். செவ்வரத்தையும், கரிக்குருவியும் அயல்விட்டில். வாழைப்பொத்தி மணக்கவில்லை. கொய்யாவும் மாதுளையும் சிரித்தன. அக்கரைக்கு இக்கரை பச்சை. இக்கரைக்கோ அக்கரை... பச்சை. விழித்துக்கொண்ட குட்டிநாய் வேலிபாய்ந்து அடுத்தவீட்டில். வேலியை ஆட்டிப் பார்க்கிறார் அப்பா, காணி பெருத்துவிட்ட திளைப்பில். உக்கிய துலாவும், இத்துப்போன பூவரசும் என்னுடன் நேசமாகச் சிரித்தன.

இப்போதெல்லாம் ராசாத்தி என்னிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்கிறாள். எனது வித்துப்போன வாழ்க்கையைப் பற்றி அவளுக்கும் புரிந்துவிட்டது போலும். "திரைந்த பாலும், அழுகிய தேங்காயும் திருமணத்திற்கு ஆகாதாம்! திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்கிறாள். ஒரு சிறைக்குப் பயணப் பாதை அமைக்கிறாள்... அவளும் கூடவே வருகிறாளாம்.

காலங்கள் விரைந்தோடி விமானமது உருண்டோடி, அந்தமான் தீவுக்கு ஆகாயத்தில் ஒரு பயணம். ராசாத்தியும் கூடவேதான். கண்கள் சிவந்து கிடந்தன. சிறைக்குப் போகும் சந்தோஷத்தில் அழுகிறாள் போலும். வெள்ளை முகங்களும், வெள்ளைத் தெருக்களும் வியப்புடன் ராசாத்தி கண்களில். உக்கிய துலாவும், இத்துப்போன பூவரசும் பரிதாபத்துடன் எனது சிந்தனைகளில்.....!

இன்றும் விடிந்தது. ஜன்னலில் கம்பிகள் இல்லை. காக்கைச் சத்தம் காதில் விழவில்லை. ஒற்றைமரக் குயிலுக்கு இங்கு இருக்க மரமில்லை. அதை உச்சஸ்தாயியில் பாட குளிரும் விடவில்லை. வாழைப்பொத்தி மணக்கவில்லை, செவ்வரத்தை மரமில்லை. கரிக்குருவி நீர் குடிக்கவில்லை. பெட்டைக்கோழி பீச்சவில்லை. குட்டிநாய் அதை முகரவில்லை. உக்கிய துலாவும் இத்துப்போன பூவரசும்கூட அங்கில்லை. ராசாத்தி அலுப்பு முறிக்கவில்லை. சுருண்டு தூங்கிக் கிடந்தாள். சரவணை மட்டும் சுதந்திரமாகப் பாடிக்கொண்டிருந்தான், அவனது நாட்டில்.●



www.tamilarangam.net

www.tamilarangam.net

மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி88

# பத்தாண்டு துயரத்தின் மறுபக்கம்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழ் மக்கள்மீதான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுப் பத்து வருடங்கள் கடந்துவிட்டன. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களாலும், குண்டர்களாலும் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட இந்த வெறித்தாக்குதல்கள் சுமார் மூவாயிரம் தமிழர்வரை பலியெடுத்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்த வன்செயல்களில் திட்டமிடப்பட்ட முறையில் அழிக்கப்பட்ட தமிழ் மக்களது சொத்துகள் பலநூறு கோடி ரூபாய்கள் பெறுமதியானவை.

வாக்காளர் அட்டைகளைக் கையில் வைத்துக்கொண்டு தமிழ் மக்களது இருப்பிடம், தொழிலகங்கள், வணக்கஸ்தலங்கள் போன்றவற்றை இலக்குத் தவறாமல் தாக்கிய இந்தக் காடையர் கூட்டத்திற்கு அரசின் உறுப்பினர்கள் வழிநடத்த, ஆயுதமேந்திய அரச பாதுகாப்புப் படைகள் பாதுகாப்பு வழங்கின.

இந்த வெறிக்கூட்டத்தினால் உயிருடன் துடிதுடிக்கக் கொழுத்தப் பட்டவர்களும், அங்கங்கள் துண்டிக்கப் பட்டவர்களும், காடைத்தனமான காமவெறிச் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டவர்களும் என, இலங்கையில் பிறந்த குற்றத்திற்காகத் தமிழர்கள் தண்டிக்கப்பட்ட ஒருவாரம்தான் கறுப்பு யூலை என இன்றும் நினைவுகூரப்படுகிறது. தமது சொத்துகளை இழந்தும், தமது எதிர்காலத்தையே சூனியமாக்கியும் தமிழர்கள் தமது தாய்நாட்டிலேயே பழிவாங்கப்பட்ட துயரத்திற்கு இன்றுவரை எந்த விசாரணையும், நியாயமும் கிட்டவில்லை.

புத்தரின் பெயராலும், அவரது பஞ்சசீலக் கொள்கைகளின் பெயராலும் நிகழ்த்தப்பட்ட இந்தப் படுகொலைகளால் புத்தன் வடித்த கண்ணீர் இன்றும் இலங்கையில் ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது.

பத்து வருடங்கள் முன்னர் நிகழ்ந்த இந்த இனவெறியாட்டம், ஈழத்தமிழர்களது துயர்நிறைந்த வரலாற்றில் சடுதியான மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவே பாராளுமன்றப் பாதையில்

சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமைகள் மறுக்கப்பட்டு அதிருப்தியுற்றிருந்த தமிழ் மக்கள், ஆயுதப்போராட்டம் இன்றித் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்பதை உணர்ந்தனர். இதன் விளைவே ஈழ விடுதலை ஆயுதக் குழுக்களின் தோற்றமும், வளர்ச்சியும். சரியான தருணத்தை எதிர்பார்த்திருந்த இந்தியா, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தனது நலன்களைக் கருத்திற் கொண்டு விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவை வழங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது, ஆதரவை வழங்குவதாகக் காட்டிக் கொண்டது, தனது நலன்களுக்கு ஏற்றவகையில் ஆதரவை வழங்கியது. ஈழத்தமிழர்களது கண்ணீர் தமிழ்நாட்டில் எழுப்பிய அனுதாப அலையும் இதற்கு முக்கிய காரணம் ஆகும்.

இந்தக் கட்டத்தில் கடந்த பத்து வருடங்களையும் நாம் மீட்டுப் பார்ப்போமாயின் பல கசப்பான உண்மைகளை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். பரந்துபட்ட மக்கள் போராட்டமாக வளரவேண்டிய தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டம் குறுந்தேசியவாதத்தினுள் கட்டுண்டு வெறும் குழுநிலைத் தேசியவாதமாகக் காட்சி தருகிறது. தமிழ்மொழி பேசும், பாரம்பரியமாக வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் பல்வேறு தமிழ்க் குழுக்களாலும் காலம்காலமாகப் படுகொலை செய்யப்பட்டு வருவதும், அவர்கள் துப்பாக்கிமுனையில் மனிதநேயத்திற்கு முரணான முறையில் வெளியேற்றப்பட்டமையும் எமது தேசிய உணர்வும் எழுச்சியும் இனவாதமாகக் குறுகியமைக்குச் சிறந்த முன்னுதாரணங்களாக உள்ளன. அப்பாவிச் சிங்கள மக்கள்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களையும் இந்த இடத்தில் மறந்துவிட இயலாது.

தமிழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ள எனத் தொடங்கப்பட்ட போராட்டம் தமிழ் மக்களது உரிமைகளையே பறிக்கும் நிலையில் வளர்ந்து நிற்பதையே இன்று காணமுடிகிறது. மக்களின் எதிரிகளுக்கு எதிராக இருக்கவேண்டிய போராட்டம் மக்களுக்கு எதிராகி நிற்கிறது. எமது மிகப்பெரிய எதிரியான, இலங்கை இனவாத அரசுடனும், எமது போராட்டத்தைத் தனது நலன்களுக்காகப் பலியிட்டுவரும் இந்திய அரசுடனும் காலத்திற்குக் காலம் சகல விடுதலை அமைப்புகளுமே தோளோடு தோளாக நின்று ஒத்துழைத்துள்ளன, ஒத்துழைத்தும் வருகின்றன.

www.tamilarangam.net

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோணர்கள்

எந்தத் தமிழ் மக்களது விடுதலைக்காகத் தாம் போராடுவதாக இயக்கங்கள் கூறினவோ, அதே தமிழ் மக்களையே சிறைகளில் அடைத்துச் சித்திரவதை செய்ததும், சக இயக்கப் போராளிகளையே உயிருடன் கொழுத்தியதும் கொன்றொழித்ததும் விடுதலையின் பேரால்தான். கடந்த காலங்களில் தமிழ் விடுதலை அமைப்புகளால் நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்படுகின்ற சித்திரவதை முகாம்கள் அடிப்படையில் இனவாத அரசினால் நடத்தப்படும் சித்திரவதைகளுக்கு எந்தவிதத்திலும் வேறுபட்டதல்ல. ஈழவிடுதலையையே தமது குறிக்கோள் என்று கூறிக்கொண்ட இயக்கங்கள் பல இன்று இலங்கை, இந்திய அரசுகளிடம் மடிப்பிச்சையை எதிர்பார்த்துள்ளன. 1983இல் பெருமளவு மக்கள் தமது தாயகம் என்ற நம்பிக்கையில் குடாநாட்டை நோக்கி ஓடிவந்தனர். இன்று குடாநாட்டை விட்டுப் பெருமளவில் தமிழர்கள் வெளியேறி வருவதுடன், அதற்குப் பாதுகாப்பைக் காரணமாகக் கூறும் நிலையில் உள்ளனர்.

தமிழ் மக்களது வரலாற்றில் கடந்த பத்து வருடகாலத்தில் அடைந்த துயரங்கள் முன்னெப்போதும் இருந்திராதவை. விடுதலையின் பெயரால் ஏறத்தாழ இருபத்தையாயிரம் பொதுமக்களையும், போராளிகளையும் இழந்தபின்பு நாம் சாதித்துள்ளது என்ன? 40 வருடங்களுக்கு முன் எழுந்த சமஸ்டிக் கோரிக்கையே இன்று செயலிழக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது. இதற்குத் தனது இனத்தையே விலைகூறி விற்கும் துரோகிகளும் காரணம் என்பதை மறுக்கமுடியாது.

இடையில் ஏதாவது தீர்வுகள் ஏற்படும் சூழல் நிலவினாலும் அந்தத் தீர்வுமூலம் தமிழ் மக்களுக்கு உண்மையான விடுதலை இருக்குமா என்பது கேள்விக்குறியே. எமது வரலாற்றில் இதுவரை நிகழ்ந்த தவறுகளை இனியாதல் திருத்தி, எம் மக்களது உண்மையான விடுதலையை வென்றெடுக்க எம்மாலியன்ற தேடலிலும், பணிகளிலும் ஈடுபடல் அவசியம். இது எம் அனைவரதும் கடமையாகும்.

சுவடுகள் 48,
ஆடி'93

சுவடுகள்

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

www.tamilarangam.net

உ
சிவமயம்

# மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## அறிமுக அழைப்பிதழ்

காலம் : 20.08.93 மாலை 6.00 மணி.
இடம் : Lilleborg skole, Thorshovgt 9.
(ta trikk Nr. 2 eller Nr. 11 og gå av på Thorshov).

கடவுள் வணக்கம் : திருமதி ஜெ . வாசுகி .
தலைமை உரை : திருமதி மல்லிகா நாகராசா
அறிமுக உரை : திரு இ . நாகரத்தினம்
இந்துசமய கலை கலாச்சாரங்கள் : திரு தி . திலீபன்
அங்கத்தவர் திரட்டல்

நோர்வே.ஒஸ்லோ இந்துக்களாகிய நாம் ஒன்று சேர்ந்து இந்து மத கலை காலாச்சார நெறி முறைகளை கடைப்பிடித்து ஒழுகவும்
எமதும்— எமது எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வுக்கும், ஆன்மீக ஈடேற்றத்துக்குமான ஆக்க முயற்சிகளில் ஈடுபடவும் கடமைப்பாடுடையோம்.

இந்நிலையில், வழிபாட்டுத் தலம் ஒன்றை அமைப்பதன் மூலம் எமக்கான இலட்சியங்களை ஈடேற்றலாம் என்று கருதுகின்றோம்.
அன்பர்கள் அடியார்கள் கூட்டத்துக்கு வருகை தந்து ஆலோசனை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,
இந்து மாமன்றம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று எப்போதும் இல்லாதவாறு மூன்றாம் உலக நாடுகள் பல்வேறு வகைப் பிரச்சனைகளைச் சந்திக்கின்றன. அவற்றில் முக்கியமானது வறுமை. உலக ரீதியான பொருளாதார நெருக்கடியும், அபிவிருத்தியுற்ற நாடுகளின் சுரண்டலும் மூன்றாம் உலக நாடுகளின் வறுமைக்கு முக்கிய காரணமாக உள்ளன.

இவற்றைவிட மூளைசாலிகளின் வெளியேற்றமும் மூன்றாம் உலக நாடுகளைப் பெரிதும் பாதிக்கும் ஒரு விடயமாகும்.

ந.வ.கமலநாதன்

# மூன்றாம் உலகமும் மூளைசாலிகளும்

பெரும்பாலான 'மூளைசாலிகள்' தமது தனிப்பட்ட பொருளாதார வளத்தை மேம்படுத்தும் நோக்குடன் செல்வந்த நாடுகளை நோக்கிப் படையெடுக்கின்றனர். வேறுசிலர் உயர்கல்வி பெறுவதற்காக மேலைநாடுகளை நோக்கி வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையினர் தமது தாய்நாடுகளுக்குத் திரும்பிச் செல்வதில்லை. இவ்வாறு உயர்கல்வி பெறும் சந்தர்ப்பங்களை மூன்றாம் உலக மாணவர்களுக்கு நோர்வேயும் வழங்கியது. (இது 1988உடன் இலங்கை மாணவர்களுக்கு - குறிப்பாக தமிழர்களுக்கு - நிறுத்தப் பட்டது) அண்மையில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பு ஒன்றில் 90% மாணவர்கள் படிப்பு முடிந்ததும் தமது தாய்நாட்டுக்குச் செல்வதில்லை எனவும், 10% பேரே திரும்பிச் செல்வதாகவும் அறியப் படுகிறது.

இவ்வாறு மூளைசாலிகள் வெளியேற்றத்தால் மூன்றாம் உலக நாடுகள் மேலும் வளர்ச்சி அடைவது தடைப்படுகிறது. எதிர்கால சந்ததியினரை உருவாக்க வேண்டிய இவர்கள் மக்களையும், சமூகத்தையும்

www.tamilarangam.net

இருளில் கைவிட்டுச் செல்வதாகவே குற்றச்சாட்டுகள் வைக்கப் படுகின்றன. இவ்வாறான குற்றச்சாட்டுகள் தமிழருக்கும் நன்கு பொருந்தும். இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தில் போதிய ஆசிரியர்களோ விரிவுரையாளர்களோ இல்லை. பலர் தாமாகவும் சிலர் 'நிர்ப்பந்தம்' காரணமாகவும் வெளியேறியுள்ளனர். இந்நிலையில் எமது அடுத்த சந்ததி கல்வியறிவு பெற்றதாக (அறிவியல், விஞ்ஞானம், தொழில்நுட்ப, கலை கலாசார) எவ்வாறு உருவாகமுடியும்?

யாழ்ப்பாணத்தில் தற்போது கடவுளுக்குச் சமமாக மதிக்கப் படுபவர்கள் போராளிகளும் வைத்தியர்களும். இதில் வைத்தியர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு எண்ணிக்கையில் சுருங்கிவிட்டனர். ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் தமிழர் மத்தியில் அதிகளவு கல்விமான்களும் வைத்தியர் பொறியியலாளர் போன்ற துறைசார் நிபுணர்களும் நிறைந்திருக்கும் விதத்தில் அதிகம் உருவாகினர். ஆனால் இன்று நிலை தலைகீழாகிவிட்டது. கடந்த பத்து வருடத்திற்குள் நிலைமை இத்தனை வேகமாகச் சீரழிந்துள்ளது. இந்நிலை இப்படியே தொடருமெனில், மீண்டும் பழைய நிலையை அடைவது கனவிலும் நடக்க முடியாத ஒன்றாகவிடும்.

இந்தப் போக்கைக் கவனத்தில் எடுத்து வெளிநாடுகளில் வாழும் கல்விமான்கள், அறிஞர்கள் ஒரு செயற்பாட்டுத் திட்டத்தை ஏற்படுத்தி ஈழத்திற்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும். இது அவசியமானதும் அவசரமானதும். இதைச் செய்யத் தவறுமிடத்து அறிவாளர்களது அறிவு விழலுக்கிறைத்த நீராகிவிடும் என்பதில் ஐயமில்லை. வரலாறும் இவர்களை மன்னிக்காது.




இதோ இந்தப் படத்தில் உள்ள துப்பாக்கி நோர்வேயில் தடை செய்யப் பட்டுள்ளது. நல்லதுதானே என்கிறீர்களா? விடயம் என்னவெனில் இது உண்மையான துப்பாக்கி அல்ல, சிறுவர்களின் விளையாட்டுத் துப்பாக்கிதான். இதன் பெயர் **Omega air softgun.** கடந்த மாதம் இந்தத் துப்பாக்கி தடை செய்யப்பட முக்கிய காரணம் இது பிஸ்டலை ஒத்திருப்பதும், சிறிய பிளாஸ்ரிக் சுற்றுவட்டத்திற்குச் சிதறித் தெறிக்கக் கூடியது. இதனால் பலர் காயமடைவதும், குறிப்பாகக் கண்கள் பாதிக்கப்படும் அபாயமும் உள்ளது. இதுவே தடை செய்ய முக்கிய காரணம் என குழந்தைகள் குடும்பநலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

www.tamilarangam.net

# தேசிய சோசலிசமெனப்படும் நாசிசம்

சுகுமாரன்

முதலாம் உலக யுத்தத்தின்பின் மேற்கொள்ளப்பட்ட வேர்சயில்ஸ் உடன்படிக்கை வெறும் பழிவாங்கும் நோக்குடனேயே உருவாக்கப்பட்டது. யுத்தத்தால் பாதிப்புற்ற ஜேர்மனிய இத்தாலிய மக்களின் புனர்வாழ்விற்கு எதுவித திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இச்சமயத்தில் இளம் உள்ளங்களில், மத்தியதர தாழ்ந்த வர்க்கங்களிடமிருந்து தோன்றிய பாசிச, நாஜிச அமைப்புகள் செல்வாக்குப் பெற்றன. எதுவித அரசியல் திட்டங்களுமின்றி பழிக்குப் பழி என்ற நோக்கில் வளர்ந்த இந்த அமைப்புகளின் இத்தாலியின் பாசிச முசோலினியும், ஜேர்மனிய நாஜிஸ்ட் அடோல்ப் ஹிட்லரும். முசோலினி ஒரு வீரர் என்றால், ஹிட்லர் ஒரு மாவீரர் எனலாம். இவர்களது அமைப்புகள் சமூகத்தின் மத்தியதர, கீழ்த்தட்டு மக்களிடையேயே பெரிதும் வளர்ந்தன.

வேர்சயில்ஸ் உடன்படிக்கையின் அநீதியானது இந்த இரு நாட்டு மக்கள் மத்தியிலும் வெறுப்புணர்வை வளர்த்து வந்தது. 'எல்லா யுத்தங்களிலும் முடிவானதொரு யுத்தத்தில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றுவிட்டதாக' நேசநாட்டணியினர் கருதினர். தங்களால் நிறுவப்பட்ட சர்வதேச சங்கம் தங்களின் கூட்டுப் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதுடன் தங்களை யாரும் ஆக்கிரமிக்காத வகையில் பாதுகாக்கும் எனக் கருதினார்கள். ஆனால் முடிவு வேறுவிதமாக இருந்தது. யுத்தத்தில் தோல்வியுற்றிருந்த ஜேர்மனிக்கு எதுவித புனர்வாழ்வும் அளிக்காதது மட்டுமன்றி அந்த நாட்டின்மீது சகல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. ஜேர்மனியிடமிருந்து நட்டஈடு பெறவும் முடிவு செய்யப்பட்டது. இத்தகைய கெடுபிடிகள் காரணமாக ஜேர்மன் நாட்டில் பாரிய பொருளாதார

அதிகாரத்தில் மாற்றுக் கருத்துள்ள அமைப்புகளும், தனிநபர்களும் அழிக்கப்பட்டனர். பலலட்சம் யூதர்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். எதிர்ப்புகள் யாவும் ஈவு இரக்கமின்றி களைந்தெறியப்பட்டன. இந்த அமைப்புகளின் வரலாற்றைச் சுருக்கமாக வாசிக்கும்போது ஈழத்திற்காகப் புறப்பட்ட இயக்கங்களின் செயல்பாடுகளும் உங்கள் கண்முன் வந்தால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல.

வேர்சயில்ஸ் ஒப்பந்தம், போரில் தோல்வியுற்று அவமானமும் அதிருப்தியும் அடைந்திருந்த ஜேர்மனிய இத்தாலிய மக்களிடையே மேலும் பாரிய நெருக்கடியை ஏற்படுத்துவதாயிருந்தது. இச்சமயத்தில் தோன்றியவர்கள்தான்

www.tamilarangam.net

நெருக்கடிகளும் அரசியல் உறுதியற்ற நிலையும் தோன்றின.

வேர்சயில்ஸ் உடன்படிக்கையின் பாரபட்சமானது நெருக்கடியில் தவித்த ஜேர்மனிய இத்தாலிய மக்களது 'புதிய தேடலு'க்கான வழிவகையைத் தோற்றுவித்தது. இந்த நெருக்கடியான நிலையில் தமது நாட்டைப் புனரமைக்கப் போவதாகவும், அவற்றின் பழம்பெருமையை நிலைநிறுத்தப் போவதாகவும், தமது நாட்டை மீண்டும் உன்னத நிலைக்குக் கொண்டுவரப் போவதாகவும் அறைகூவல் விடுத்த ஹிட்லரும் முசோலினியும் அரசியல் அரங்கின் முன்னணிக்கு வந்தனர்.

முசோலினியின் பாசிசமானது அடிப்படைக் கொள்கைகள் எதுவுமின்றி அடிக்கடி மாறும் இயல்புடையதாக இருக்கையில், ஹிட்லரின் நாஜிஸமோ நன்கு திட்டமிடப்பட்டு ஜேர்மனியின் தத்துவஞானிகளான ஹேகல், பிட்சே, லியட்சே போன்றவர்களின் கோட்பாடுகளை மையமாகக் கொண்டு செயற்பட்டது.

ஜேர்மனியில் ஏற்பட்ட பொருளாதார அரசியல் நெருக்கடிகள் தாழ்ந்த, மத்தியதர வர்க்கத்தினரையே அதிகம் பாதித்தன. 'முதலாளித்துவ யங்கர்களா'லும், 'கொம்யூனிச கட்சித் தொழிலாள இயக்கங்களா'லும் ஏற்பட்ட நெருக்கடி நிலையானது நாட்டில் சர்வாதிகார ஆட்சி ஏற்பட வழிகோலியது. ஜேர்மனியில் 'ஒழுங்கை நிலைநிறுத்தி அதை சர்வதேச நாடுகளின் அந்தஸ்திற்குக் கொண்டுவர' தமது கட்சியினாலேயே முடியும் என ஹிட்லர் தலைமையிலான நாஜிகள் (தேசிய சோசலிச கட்சி) கூறிவந்தனர். இக்காலத்தில் நிகழ்ந்த தேர்தலில் கணிசமான வெற்றியீட்டிய இவர்கள் அரசாங்கத்தைத் தமது பொறுப்பில் விடுமாறு கோரி அதற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி ஸன்டன்போர்க்கிடமிருந்து பெற்றனர்.

தேசிய சோசலிஸ்ட் என்று தம்மைக் கூறிக்கொண்ட இவர்கள் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றதும் தமது சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் நடவடிக்கைககளில் இறங்கினார்கள். கட்சியின் தலைவர் ஹிட்லர் 'புளேர்' என்று பட்டம் சூட்டப்பட்டு மிக உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டு தெய்வத்திற்குச் சமமாகப் போற்றப்பட்டார். அவருக்கென மெய்க்காவலர்கள் 'விசேட வீரர்கள்', 'மின்னல் வீரர்கள்' மற்றும் கெஸ்தபோ எனக்கூறப்படும் விசேட இரகசியப் பொலிசார், பாரிய சிறைகள் என்பனவே ஆட்சியில் முக்கியம் பெற்றன.

அடக்குமுறையும், மாற்றுக் கருத்துடையோரை வேட்டையாடலும்,

## வெளிநாட்டார் வேண்டாம்!

குடியிருப்பு அமைப்பு ஒன்று தன்னிடமுள்ள குடியிருப்புகளில் ஒன்றில் இனி வெளிநாட்டவர்களைப் புதிதாகக் குடியமர்த்தப் போவதில்லை என அறிவித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் வீடுகளையும் சுற்றாடலையும் பராமரிக்கும் முறைகள் தொடர்பாகவும், சுற்றாடலில் நடந்துகொள்ளும் முறை தொடர்பாகவும் குடியிருப்பாளர்களது முறைப்பாடுகளை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அந்த அமைப்பின் சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

– சிவன் –

www.tamilarangam.net

வெகு நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டு எதிர்ப்புகளைக் களைவதும் நுண்கலைகளாகத் தேர்ச்சி பெற்றன. சகல எதிர்ப்பு சக்திகளும், ஜனநாயக அமைப்புகளும் வாய்ப்பூட்டுப் போடப்பட்டன. தொழிற்சங்கங்கள், மூலதன வர்த்தகர்கள்,

பொலிஸ் ராணுவ தலைமைகள் கட்சியின் ஆதிக்கத்தினுள் ஒடுக்கப்பட்டன. லூதர் திருச்சபை அரசுடன் இணைக்கப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையின் ஆதிக்கம் குறைக்கப்பட்டது. ஹன்ஸ் கோயபல்ஸின் தலைமையில் பிரச்சாரக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இது இனவுணர்வைத் தட்டியெழுப்பும் வகையில் செயல்பட்டதுடன், சகல தரப்பு அபிப்பிராயங்களிலும், கருத்தமைவுகளிலும் ஏகபோக உரிமை கொண்டாடியது. கலை, இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் போன்றவை அரசின் உடைமையாக்கப்பட்டு அரசின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. இந்தத் துறைகளின்மீதும் இவை தொடர்பான ஏனைய விஷயங்களிலும் நாஜிக் கட்சிக்கும் அதன் தலைவர்களுக்கும் சாதகமான முறையிலன்றி சுயேச்சையாக எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்கத் தடை விதிக்கப்பட்டது.

இளைஞர் உள்ளங்களில் நாஜி கொள்கைகள் வேகமாகப் பரப்பப்பட்டு அவர்கள் ஆயுதக் கவர்ச்சிக்கு உள்ளாக்கப் பட்டனர். இதற்கென பிரச்சார அமைச்சு பல தந்திரங்களை மேற்கொண்டது. ஜேர்மனியர் மகத்தான சாதனைகளை நிலைநாட்ட வேண்டியுள்ளது என்றும், உலகமே தங்கள் பரம்பரை என்றும், தாங்களே உயர்ந்த இனத்தவர்கள் என்றும், உலகை ஆளப் பிறந்தவர்கள் என்றும் கூறி மாற்றுக் கருத்துக் கூறுவோரையும் அரசியல் எதிரிகளையும் கொடூரமாக எதிர்த்தனர். மகத்தான சாதனைகள் நிகழ்த்தவுள்ள இச்சந்தர்ப்பத்தில் ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றிற்கு முக்கியம் கொடுப்பது 'ஜேர்மனியினர் மீட்புப் பெறத்' தடையாக இருக்கும் எனக் கூறப்பட்டது.

அரசாங்கத்திற்காக மக்களேயன்றி மக்களுக்காக அரசல்ல என்ற கருத்தும் வலியுறுத்திப் புகுத்தப்பட்டது. கொம்யூனிஸம், சுயேச்சை, ஜீவகாருண்யம், யூததத்துவம், இரத்தப் புரட்சியற்ற கிறிஸ்தவம், இனப்பாகுபாடற்ற ஜனநாயகம் என்பன இனத்தையழிக்கும் தத்துவங்கள் எனக் கண்டிக்கப்பட்டன. "நாம் உலகை வெற்றிகொள்ளும் முன்னர் எமக்கிடையே வாழும் சிறுபான்மையினரை 'வெற்றிகொள்ள' வேண்டும்" என்ற தத்துவத்தின் அடிப்படையில் யூதர்கள் சர்வதேச தத்துவத்திற்குக் காரண புருஷர்களாகக் காட்டப்பட்டு அவர்களது உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டுத் துரத்தப்பட்டனர், இலட்சக் கணக்கில் கொல்லப்பட்டனர்.



அரசியல் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் தத்தளித்த மக்களுக்கு, தங்களின் இழிநிலை நீக்கப்பட்டு உலகையே ஆளும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற நாஜிகளின் கூற்று உண்மையாகப் பட்டது. இதனால் அவர்கள் நாஜிகளை ஆதரிப்பதிலும், அவர்களுடன் பங்களிப்பதிலும் பெரும்பாலான மக்கள் முன்வந்தனர். தேசிய சோஷலிசக் கட்சியின்கீழ்

www.tamilarangam.net

ஜேர்மனிய அரசு இவ்வாறு 'மூன்றாவது ரீச்' என அமைக்கப்பட்டது. இது நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் அமைக்கப்பட்டது. வேர்சயில்ஸ் உடன்படிக்கைகள் தூக்கி எறியப்பட்டன. மக்கள் வேகமாக ஆயுதமயமாக்கப் பட்டனர். பழிக்குப் பழிவாங்கும் படலம் ஆரம்பமானது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தடுக்க மேற்கத்தைய நாடுகள் முன்வரவில்லை. ஜேர்மனி, கொம்யூனிஸ சோவியத் யூனியனுக்கெதிராகவே யுத்தத் தயாரிப்புகளைச் செய்வதாக அவை நம்பின. எனவே மறைமுகமாக ஒத்துழைப்பையும் வழங்கின. ஆனால் ஜேர்மனி கடைசியில் தனது யுத்தத்தை மேற்கு நாகுகளுக்கு எதிராகத் திருப்பியதுடன் வெற்றியும் கண்டது.

வேர்சயில்ஸ் உடன்படிக்கை மூலம் ஜேர்மனியை ஒடுக்கிவிடலாம் என நினைத்த மேற்குநாடுகள் தக்க பாடம் படித்தன. குறுகியகால இடைவெளியில் ஜேர்மனியில் தேசிய சோசலிசத்துக்குக் கிடைத்த வெற்றி இறுதியில் யுத்தத்தையும் பேரழிவையுமே தேடித் தந்தது. ஆக்கிரமிப்பாளர்களும் அடக்குமுறையாளர்களும் எப்போதும்

நிரந்தர வெற்றியைப் பெறமுடியாது என்ற வரலாற்றுண்மை மீண்டும் ஒருதரம் நீரூபிக்கப்பட்டது. மாபெரும் செல்வாக்கைப் பெற்றிருந்த ஹிட்லரும் அவனது தேசிய சோசலிசக் கட்சியும் மக்களின் எழுச்சியைத் தூண்டி அவர்களை அழிவிற்கு உட்படுத்தியதுடன் அவர்களின் வாழ்வும் குறுகிய காலத்தில் முடிவடைந்தது.

ஜேர்மனியில் முதலில் கொம்யூனிஸ்டுகளிடம் வந்தார்கள்.
நான் எதுவுமே பேசவில்லை,
ஏனென்றால் நான் ஒரு கொம்யூனிஸ்ட் இல்லை.

பின்பு யூதர்களிடம் வந்தார்கள்.
நான் ஒன்றும் பேசவில்லை,
ஏனெனில் நான் யூதன் இல்லை.

அதன்பின் தொழிற்சங்கவாதிகளிடம் வந்தார்கள்.
நான் எதுவும் பேசவில்லை,
ஏனென்றால் நான் தொழிற்சங்கவாதி இல்லை.


பின்பு கத்தோலிக்கர்களிடம் வந்தார்கள்.
நான் எதுவும் பேசவில்லை,
ஏனென்றால் நான் ஒரு புரட்டஸ்ரான்.

அதன்பின் என்னிடம் வந்தார்கள்.
அப்பொழுது,
பேசுவதற்கு யாருமே இருக்கவில்லை.

– ஹிட்லரின் சித்திரவதை முகாமில் அடைக்கப்பட்ட ஒரு புரட்டஸ்ரான் மதத் தலைவர் எழுதியது.

www.tamilarangam.net

## அத்தியாயம் 5.




எண்ணெய்ச் சட்டியை அடுப்பில் வைத்துவிட்டு, குருவியிறைச்சிக்கு உப்பு, மிளகாய்த் தூள் பிரட்டிக் கொண்டிருந்தாள் பிலமினா.

பிலமினாவின் உருவம் நன்றாகத்தான் சீரழிந்துவிட்டது. வயதுக்கு மீறிய முதுமை அவளைப் படர்ந்திருந்தது. கண்கள் குழியுட் சென்று, கன்னங்கள் ஒட்டி, காதோர முடி வெளுத்து, உடலம் மெலிந்து சுள்ளித் தடியாகி, உருக்குலைந்துதான் போனாள்.

குமரில் அவள் எவ்வளவு வடிவாக இருந்தாள். அந்த ஊர் இளந்தாரிப் பெடியளைக் கிறுகவைத்து, தூக்கத்தில் "பிலமினா" என்று புலம்பவைத்த இவள், இதற்கிடையில் எப்படி இவ்வளவு முதுமை பூண்டாள். முப்பத்திஐந்து வயதைக்கூடத் தாண்டாதவள் அறுபதுவயதின் உடற் தளர்வையல்லவா போர்த்திக் கொண்டுள்ளாள்.

முதுமைக்கும் உடற் தளர்விற்கும் வயது காரணமில்லைப் போலும். கவலைகளும் ஆயுளைக் குறைக்கவல்லன என்பது பிலமினா விடயத்தில் எவ்வளவு மெய்ப்பித்தாகி விட்டது.

பரலோகஞானியின் தந்தை யாகோபு அந்த ஊரிலேயே பெரிய தோணி, வலை வைத்துத் தொழில் நடாத்தும் சம்மாட்டி. அவருடைய தொழிலில்த்தான் பிலமினாவின் தந்தை தாவீது மீன்பிடிக்கச் சென்றுவருவார். யாகோபின் தொழிலில் எல்லாத் தொழிலாளிகளும் தாவீதின்மீது அளவுகடந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தனர். அத்தொழிலில் அனுபவம் மிகுந்த தொழிலாளி என்பதாலும், எல்லாத் தொழிலாளிகளும் அவரை மதிப்பதாலும் தாவீதுக்குத் தொழிலைத் தலைமையேற்று நடாத்தும் பாரிய பொறுப்பான மண்டாடியார் பதவியைக் கொடுத்தார் யாகோபு.

யாகோபின் கடற்கரைத் தென்னந்தோப்பில்தான் குடிசை அமைத்து, தனது மனைவி, மகள் பிலமினாவோடு குடியிருந்து காலத்தைக் கடத்தினார் தாவீது.

தாவீதில் இரக்கப்பட்டுத்தான் தனது சொந்தத் தென்னந்தோப்பில் குடிசை போட்டு இருக்கவிட்டார் யாகோபர் என்பது ஊராரின் அபிப்பிராயம். ஆனால், யாகோபு ஆதாயத்துடன்தான். தென்னந்தோப்பில் காவலுக்கு கூலிக்கு ஆளமர்த்த வேண்டிய தேவையில்லை. அப்படிக் கூலிக்கு ஆளமர்த்தினாலும் தேங்காய், ஓலைக்களவுகள் நடக்கத்தான் செய்யும். ஆனால் தாவீதை அதற்குட் குடியமர்த்தினால், கூலியாளுக்குரிய கூலி கொடுக்கத் தேவையில்லை. காவலும் பலமாக இருக்கும். தாவீது கடலுக்குப் போகும் சமயத்தில், அவனது மனைவி அன்னம்மாளும், மகள் பிலமினாவும் தோப்புக்குக் காவலாய் இருப்பார்கள்.

www.tamilarangam.net

இப்படியெல்லாம் கணக்குப் போட்டுத்தான் யாகோபு அவர்களைத் தோப்பில் இருக்க அனுமதித்தார். அத்தோடு 'தர்மவான்' என்ற பெயரையும் பெற்றுக்கொண்டார்.

பரலோகஞானிக்கு அப்போது பத்தொன்பது இருபது வயதுதான் இருக்கும். முன்பெல்லாம் தந்தையின் தொழிற் பக்கமோ, தென்னந் தோப்புப் பக்கமோ அவன் வருவதேயில்லை. ஆனால் இப்போது அடிக்கடி தோப்பிற்கு வருவான்.

பிலமினாவின் அழகை அவ்வூர் இளசுகள் வர்ணித்து வர்ணித்து வாயூறுவதும், யார் அவளைக் கட்டுவது என்ற போட்டியும்தான் பரலோகஞானியைத் தோப்பின் பக்கம் தள்ளியது.

உண்மையிலேயே அவன் பிலமினாவின் அழகில் மயங்கித்தான் போனான். பார்வைகளாற் பேசியவர்கள், பவுடர்ப் பேணி, சட்டைத்துணி பரிமாறும் அவளவிலான நெருக்கத்தில் வந்தாயிற்று. காணிநிலம் பாடிய பாரதியைப் பற்றி அவனெதுவும் அறியான். ஆனால், கடலலைகளில் தவழ்ந்துவரும் மெல்லிய காற்று அந்த முந்நூறுக்கு மேற்பட்ட தென்னைகளின் கீற்றுகளில் வந்து தடவி, அந்தத் தோப்பையே குளிரூட்ட, முத்துச்சுடர் நிலவொளியில் குடிசை முற்றத்துச் சுடுபுழுதியில் அமர்ந்து தாவீதும், அன்னம்மாளும் கரவு நினையாதபடி பிலமினாவோடு நீண்டநேரமாகப் பேசுவதும், அவர்கள் பாராதவேளையில் விரல்களால் அவளை வருடிச் சில்மிசம் செய்வதும் வழமைத் தொடர் நிகழ்வுகளாயின.

கட்டினால் பிலமினாவைத்தான் கட்டவேண்டும் என்ற பிடிவாதமான முடிவு அவனுள். பரலோகஞானி கைவிடமாட்டான் என்ற நம்பிக்கை அவளுள். தாவீதும், அன்னம்மாளும் இல்லாத சமயங்களில் அவர்கள் இருவரும் அந்தத் தென்னந் தோப்பின் சுதந்திரப் பறவைகள்.

"குப்பையில கிடந்ததுகளைக் கழுவிக்கொண்டுவந்து மெத்தயில வச்சாலும் குப்பயக் குப்பயத்தான் தேடிப் போகுமாம். எங்கடியவள்? ஏன்ர புள்ளய வளச்சுப் போட்ட தேவடியாள்.?" பரலோகஞானியின் தாய் பாறாத்த, தோப்புக்குள் குடிசைமுன்னால் நின்று வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசியது முதலில் அன்னம்மாளுக்கும், தாவீதுக்கும் விளங்கவேயில்லை.

தென்னந்தோப்புக்குள்ள மகளைப் படுக்கவிட்டாத்தான் தோப்ப வளச்சுப் புடிக்கலாமெண்டு நினச்சிற்றாளாக்கும். எடியேய் அன்னம்மா எங்கயடி உன்ர மகள்? அந்தத் தேவடியாள வரச்சொல்லு வெளியில" இப்போதுதான் தாவீது, அன்னம்மாள் இருவருக்குமே எல்லாம் விளங்கத் தொடங்கியது.

"ஏய், போடி வீட்ட, ஊரைக்கூட்டிப் பரிசுகெடுத்தாமல்ப் பேசாமல்ப்போடி. புள்ள வளக்கிறாள் புள்ள. பரதேசிநாய ஊர்மேய விட்டுப்போட்டு இப்பவந்து கத்திக்கொண்டு நிக்கிறாள்" பாறாத்தையின் பின்னால் வந்துசேர்ந்த யாகோபு மனைவியை அதட்டி வீட்டிற்கு அனுப்பிவிட்டு, "தாவீது,.... இப்பிடியொருக்கா வா" என்று தாவீதை கடற்கரைப் பக்கமாகக் கூட்டிச் சென்றார் யாகோபு. ஏது செய்வது என்றறியாமல் அப்பாவியாய் தாவீது, யாக்கோபின் பின்னால்ச் சென்றார்.

யாகோபு அமைதியாகக் காரியத்தைச் சாதிக்கும் ஒரு மனிதர். மனைவியை அதட்டி வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டு, தாவீதோடு நிதானமாய்ப் பேசிப் பிரச்சனையைச் சுலபமாய் முடித்தார். தனது தொழிலில்த் திரியும் வன்னிப் பெடியன் செல்லக்குமாரை பிலமினாவுக்குக் கட்டிவைப்பதாகத் தானே உறுதியளித்தார். செல்லக்குமார் சின்ன வயதிலிருந்தே யாக்கோபின் தொழிலில்த் திரிகிறான். அவரது வீட்டிலே அவரது அரவணைப்பிலேயே நீண்டகாலமாய் வாழ்கிறான். எனவே தான் சொன்னால் தட்டமாட்டான் செல்லக்குமார் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை யாக்கோபுவுக்கு.

www.tamilarangam.net


செல்லக்குமாருக்கும் இந்தச் சம்மந்தத்தில் பூரண திருப்திதான். அனாதையாகத் தான் இந்த ஊருக்குள் வந்தபோது தஞ்சமளித்து, தன்பிள்ளை போல் பராமரித்த யாக்கோபுச் சம்மாட்டியே இப்போது தனக்கொரு வாழ்வைத் தேடித்தந்து, தனது அந்தஸ்தை உயர்த்துவதாகவே அவன் உணர்ந்தான்.

கட்டினால் பிலமினாவைத்தான் கட்டுவேன் என்று பிடிவாதமாய், முரண்டுபிடித்து நின்ற பரலோகஞானியைத் தேங்காய் உரிக்கும் அலவாங்கால் அடித்துக் கால்முறித்து, இரண்டுமாதம் ஒட்டகப்புலத்தானின் படுக்கையில் போட்டார் யாகோபு. அந்த இரண்டுமாத இடைவெளிக்குள்ளாகவே பிலமினா, செல்லக்குமார் திருமணம் முடிந்துபோயிற்று. கதைத்துப்பேசியதைத் தவிர, மற்றும்படி கைப்படாதவளாகத்தான் பிலமினா இருப்பாள் என்ற எண்ணத்தோடுதான் செல்லக்குமார் அவளைக் கலியாணம் செய்தான். ஆனால் பிலமினா வயிற்றில்ப் பிள்ளையோடு இருக்கிறாள் என்பதை அறிந்ததும் செல்லக்குமார் திருமணம் செய்து ஒரு மாதத்திலேயே அவளைத் தனியாக விட்டுவிட்டு ஊரைவிட்டே ஓடிவிட்டான்.

முறிந்த கால் குணமாகி, ஊருக்குவந்த பரலோகஞானி பிலமினாவை ஏற்கத் தயாராக இருந்தான். ஆனால் யாகோபு விடுவதாக இல்லை. அவனுக்கு அவசர அவசரமாய் வேறிடத்தில் கல்யாணப் பேச்சு நிகழ்ந்தது. ஆனாலும் பரலோகஞானி சம்மதிப்பதாக இல்லை. எவ்வளவோ சொல்லியும் மகன் கேட்கிறானில்லை என்பதைக் கண்ட தாய் பாறாத்த வளவிலிருந்த கிணற்றினுள் குதித்துவிட்டாள். அதிசிரத்தை எடுத்து பாறாத்தையைக் காப்பாற்றிய பின்னர், தனது பிடிவாதத்தில் இருந்து சற்றுத் தளர்ந்தான் பரலோகஞானி. பரலோகஞானிக்கு வேறிடத்தில் திருமணமும் நிகழ்ந்து முடிந்தது.

அந்த வருடம்தான் அந்தச் சிறுகிராமத்தைச் சூறாவளி விழுங்கியது. பரலோகஞானியும், பிலமினாவும் சுதந்திரப் பறவைகளாய்க் காதற் தடங்கள் பதித்த அந்தத் தென்னந் தோப்புத்தான் சூறாவளியின் முதற்பலி. அத்தோடு பிலமினாவின் பெற்றோர் தாவீதும், அன்னம்மாளும் அடுத்த பலியாகினர்.

வயிற்றுப் பிள்ளையோடு தனித்துப் போனாள் பிலமினா. மனிதத் துணையின்றித் தான் அவள் தனித்தாளே தவிர, அவளது வைராக்கியமும், வாழவேண்டும் என்ற உறுதியும், பிள்ளையைப் பெற்று வளர்க்க வேண்டும் என்ற பிடிவாதமான முடிவும் அவளைத் தனியாய் விடாமல் அவளுக்குப் பக்கபலமாகவும், ஈடிணையற்ற துணையாகவும் இருந்தன.



www.tamilarangam.net

காரைப் பற்றைகளாற் பறு;ருபத்திக் கிடந்த கோயிலுக்குச் சொந்தமான கலட்டுக் காணி ஒன்றைக் குறைந்த குத்தகைக்கு எடுத்துக் குடிசை போட்டுத் தனது நம்பிக்கைகளோடு குடியிருந்தாள்.

பொரிந்து பொன்நிறமாய் வந்த கோட்டான் இறைச்சித் துண்டுகளை எண்ணெய் வடியவிட்டு எடுத்துத் தட்டில் அடுக்கிக் கொண்டிருந்தாள் பிலமினா.

அவளுக்குள் இப்போது ஓர் பூரிப்பும், அத்தோடு ஒருவித அச்சமும். பாலனோடு ரூபன் சேர்ந்து திரிவதை நினைக்கும்போது பிரிந்துகிடந்த ஒரே இரத்தம் இப்போ ஒன்றுசேர்ந்து விட்டதாய் ஓர் ஆனந்தம். தனது நீண்டகாலப்பயன் கிடைத்துவிட்டது போல் ஓர் உணர்வு. அவள் தனக்கு வாழ்வு வேண்டும் என்றோ, இந்தச் சமூகத்தில் குடும்பப் பெண், பத்தினிப் பெண் என்ற முத்திரை வேண்டும் என்றோ தவமிருக்கவில்லை. தனது பிள்ளை உரிய இடத்திற் சேரவேண்டும்....., தனது காலம் முடிவதற்குள் இது நிகழவேண்டும் என்பதே அவளது விருப்பமாயிருந்தது. தனது காலம் முடிந்தபின்பு தனது பிள்ளை சீரழிந்துவிடுமே என்ற ஏக்கமே அவளை வதைத்துநின்றது. ஆனாலும் சிறுவயதிலேயே ஊரில் ஊதாரியென்று பெயரெடுத்த தனது மகன் பாலனோடு, ரூபன் சேர்ந்து திரிவதை அவள் அறிவாளானால்.......? நிகழப்போகும் விபரீதம் பற்றிய அச்சம் அவளை வேதனைப் படுத்தியது.

மூவரும் கலகலப்பாகப் பேசியபடி நடந்துவரும் சத்தங்கள் கேட்டன. கரையோரங்களும், மூலைகளும் பிய்ந்து, குலைந்துபோன ஓலைப்பாயை உதறி விரித்து, மூன்று தட்டுகளிலும் சரிசமனாய்ப் பகிர்ந்து வைத்தாள். தான் ஏற்கனவே சமைத்து வைத்திருந்த நண்டுக்கறியையும் அவற்றிலிட்டாள். கோட்டான் பொரியல்த் துண்டுகளையும் பகிர்ந்து தட்டுகளில் வைத்தாள்.

படலையைத் திறந்துகொண்டு மூவரும் உள்ளே வந்தனர். பாலனும் சாந்தனும் வீட்டினுள் நுழைந்தனர். ரூபன் வாசல் வளையிற் பிடித்தபடி யோசனையோடு நின்றான். ரூபன் இப்போதுதான் முதன்முதலாக இந்த வீட்டுக்கு வருகிறான். திடீரென்று அம்மாவின் தண்டனைகள் ஞாபகத்திற்கு வரவே வாயிற்படியிலேயே நின்றுவிட்டான்.

"வாவன் ராசா உள்ள....." பிலமினாவின் அன்பான வரவேற்பு அவனது சிந்தனையை மெல்லச் சீண்டி உருகவைத்தது. மெல்ல அடியெடுத்து வைத்து உள்ளே சென்றான் ரூபன்.

"ம்.... நீங்க பிடிச்ச குருவிகளயும் பொரிச்சு, நண்டுக்கறியும் வச்சிருக்கிறன், சாப்பிடுங்க" மூவரையும் பாயில் அமரவைத்துத் தாராளமாய் உபசரித்தாள். ரூபனை அதிகமாகவே கவனித்தாள். அவன் "போதும், போதும்" என்று கூறியும் விடாமல், "இன்னும் கொஞ்சம்... ஒரு சொட்டு ராசா....." என்று அன்போடு அள்ளியிட்டாள்.

பிலமினாவின் விழியோரங்கள் மெல்லக் கசிவதைப் பாலன் கவனிக்கத் தவறவில்லை. ரூபனும் அதைக் கவனித்தும், கவனியாததுபோல் இருந்துவிட்டான்.

ரூபனை இறுகக் கட்டியணைத்து; முத்தமிட வேண்டும் போல் அவளுக்குள் ஓர் அவா; அடக்கிக் கொண்டாள்.

இவர்கள் இப்படியே ஒன்றாய்க் கூடித் திரியவும், உறவாடவும் இந்த ஊர்ச்சனம் விடுமா? தன்னை ஓர் சபிக்கப்பட்டவளாய் ஒதுக்கிவைத்திருக்கும் இந்தச்சமூகத்தைத் தன்னுள்ளத்துட் காறியுமிழ்ந்தாள். தன்பிள்ளையை ஊதாரியென வர்ணிக்கிறது இந்த உலகம். அவன் அப்படியானதற்குக் காரணமாயிருந்ததும் இந்தச் சமூகம்தானே? வஞ்சகமறியாப் பச்சைப் பாலகனின் நெஞ்சில் 'வம்பிலை பிறந்தது' என்ற நஞ்சுகவந்த வசையைச் சொல்லி, அவனின்

www.tamilarangam.net

பிறப்பை இழிவாய் எள்ளிநகைத்து அவனையோர் தாழ்வு மனப்பான்மைக்குட் தள்ளியதும், துள்ளிவிளையாட வேண்டிய சின்னக் கன்றுக்குட்டியை மதங்கொண்ட காளையாய் உருவாக்கியதும் இந்தச் சமூகம்தானே என்று எண்ணிச் சபித்தாள். தன்னை ஒதுக்கிவைத்தும், தன் பிள்ளையின் பிறப்பை இழிவாய் வசைமொழிந்தும் தாம் மட்டும் சுத்தமென்று காட்டிக்கொள்ளும் இந்தச் சமூகத்தின் உள்வீட்டில் எத்தனை ஊத்தைகள் இருக்கின்றன. அப்படி ஊத்தையாய்க் கிடக்கும் இந்தச் சமூகத்தை இனியும் ஏன் பொருட்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

சாவோடு போராடிக்கொண்டு மரணக்கோட்டையின் அகழியில் வீழ்ந்து தத்தளித்துக் கிடந்தவளை மனிதாபிமான ரீதியில் உதவிசெய்யவந்த பரலோகஞானியை, இன்னமும் தன்னோடு கள்ளத் தொடர்பு வைத்துள்ளான் எனக் கதைகட்டி, நாக்கூசாமல் பேசித்திரியும் இந்தப் புழுத்த சமூகம் நாசமாய்ப் போகட்டும் என்று சபித்தாள்.

சாப்பிட்டு முடித்த அவர்கள் மூவருக்கும் கைகழுவத் தண்ணீர் கொடுத்தாள். வெளிவாசலில் நின்றபடி அவர்கள் கைகழுவிய தண்ணீர்ப் பருக்கைகள் நிலத்தில் விழும்போது, புழுதிகிளம்பிப் புகைபோல் மேலெழுந்தது. புழுதியைப் பிளந்து தண்ணீர்க் கோடுகள் ஊர்ந்து, பாம்புபோல் சென்றன. பிஞ்சுக் கரங்களால் இந்தச் சமூகத்தின் அழுக்குகள் கழுவப்படுவதாய் அவளுக்கு அந்த நீர்க்கோடுகள் தெரிந்தன. ஒரு பெருமூச்சோடு புன்னகைத்துக் கொண்டாள்.

(இன்னும் வரும்)

## கண் தெரியா.....

*நோர்வேயில் வாகனம் ஓட்டுவோரில் 2.5%பேர் பார்வைக்குறைவு உடையவர்கள் என்பது அண்மையில் நிகழ்த்தப்பட்ட கணிப்பீடு ஒன்றில் இருந்து தெரியவந்துள்ளது. நோர்வேயில் 25லட்சம்பேர் சாரதீய அனுமதிப் பத்திரம் வைத்துள்ளனர். இவர்களில் 62,500பேர் வரை பார்வைக்குறைவு உடையவர்கள் எனவும், இவர்களது பார்வைக்குறைவு வீதியில் செல்லும் ஏனையோரைப் பாதிக்கும் எனவும் தெரியவருகிறது. சாதாரணமாகக் கண்ணாடி அணிபவர்கள் பலரும் தாம் வாகனம் செலுத்தும்போது கண்ணாடிகளை அணிவதில்லை என்பதும் தெரியவந்துள்ளது.*

## தொலைபேசி வங்கி

நோர்வேயில் புதிதாகத் தொலைபேசி வங்கி ஒன்று தொடங்கப் பட்டுள்ளது. 'டிரெக்டபங்கன்' என்ற பெயரில் சுயாதீனமான வங்கியாக இந்தத் தொலைபேசி வங்கியை இயங்க வைத்திருப்பது 'டிஎன்பே' என்றழைக்கப்படும் Den Norske Bank.

நவம்பரில் தனது பணியை ஆரம்பிக்க உள்ள இவ்வங்கி, வீட்டைவிட்டு வெளியேறச் சிரமமான பலருக்கு உதவியாக இருக்கும் என நம்பப்படுகிறது. இந்த வங்கியில் கணக்கு வைத்திருப்பவருக்கும் வங்கிக்கும் இடையிலான தொலைபேசித் தொடர்புகள் ஒரு சிறு கொம்பியூட்டரால் கட்டுப்படுத்தப் படுகிறது. இதனால் பாவனையாளர் தவிர்ந்த எவரும் வங்கியுடன் தொடர்பு கொண்டு வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

பாதசாரி

www.tamilarangam.net



# தொலைவும் இருப்பும்

சி.சிவசேகரம்

தெளிவான ஒரு நாளில்
உயரே
விமானத்தின் யன்னலாற்
கீழே பார்க்கையில்,
யாவுமே தெளிவாய்த் தெரிந்தன.

தலைநரைத்த கிழட்டு மலைகள்,
குழம்பி வளைந்து நடந்த
குடிகாரா நதிகள்
களைத்துக் கிடந்த குளங்கள்,
முதுவேனில் சுட்டு மூண்ட நெருப்பின்
இலையுதிர்காலத் தணல் பரந்த
பெரு வனங்கள்,
மனிதர் அரிந்து, அவலமாய்
அவிழ்ந்த வயல்கள்,
புல்லில் வேய்ந்து விரிந்த
பசுந் தரைகள்.

எட்ட, உயரத்தே
ஒதுங்கி நின்று பார்க்கையில்,
குன்றுகளை ஒவ்வொன்றாய்த்
தூக்கிக்
கணவாய்கள் மீதாகப்
பாலம் அமைப்பதும்
எரிமலையின் வாய்மீது
பனிமலையை வைத்து
மூடி அடக்குவதும்
கடல்களை எல்லாஞ் சதுரமாகவும்
குளங்களை வட்டமாகவும்
மலைகளைக் கூம்புகளாகவும்
தீவுகளை முக்கோணங்களாகவும்
நதிகளை நேர்கோடுகளாகவும்
கண்டங்களைச் சமாந்தரமாகவும்
மாற்றி அடுக்குவதும்.
தெளிவாகவே,
மிக எளிதாகத் தெரிந்தன.

சாப்பிட்டு
வாய்துடைக்கத் தந்த
காகிதத்தில்
எல்லாவற்றையும்
கவனமாகக்
குறித்துக் கொண்டேன்.

கீழே இறங்கி
நடந்தபோது,
மரங்களும் மதில்களும்
வீட்டுக் கூரைகளும்
என்னைவிட உயரமாய்
நின்றன.

காலில்
ஒரு கல் இடறியது.

எழுதிவைத்த காகிதத்தைக்
கசக்கி எறிந்துவிட்டு
கல்லை ஒதுக்கி வைக்க
மெல்லக் குனிந்தேன்.

www.tamilarangam.net

# கறுப்பன் நீ!

மணி



இந்தக் கேள்வி பல்வேறு சிக்கல்களை உருவாக்கி வருவதுடன், பல சிக்கல்களை விடுவித்தும் வருகிறது. தமது இயலாமைக்கும் சுயநலத்திற்காகவும் ஒருசாரார் இன்னொரு சாராரைக் கீழானவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும் கருத்துரீதியாக ஆக்கி வருகின்றனர். இத்தகைய நிலையைப் பல்வேறு நாடுகளிலும், சமூகங்களிலும், இனங்களிலும் பல்வேறு கோணங்களில் பார்க்க முடியும்.

இப்படியான ஒரு நிலைதான் நிறவாதமும். 'வெள்ளை' தவிர்ந்த வேறு நிறத்தவர்களை வெள்ளை நிறவாதிகள் மட்டமாகக் கருதுவதுடன், துன்புறுத்தியும் வருகின்றனர். இன்று ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் நாளாந்தம் நிகழும் நிகழ்வாக இந்தத் தாழ்த்தல் நிகழ்ந்து வருகிறது.

அண்மையில் சிக்காக்கோ பல்கலைக்கழகம் நிகழ்த்திய கருத்துக் கணிப்பு ஒன்றில் பின்வரும் தகவல்கள் வெளியாகின.

அ: வெள்ளையர்கள் 53%பேர் கறுப்பு இனத்தவர்கள் மூளையறிவு அற்றவர்கள் அல்லது குறைந்தவர்கள் என நினைக்கின்றனர்.

ஆ: 51% வெள்ளையர்கள் நினைப்பது கறுப்பர்கள் (ஆபிரிக்க அமெரிக்கர்கள்) தேசப்பற்று அற்றவர்கள் என்று.

இ: 56% வெள்ளையர்களது கருத்துப்படி கறுப்பர்கள் வன்முறை நிறைந்தவர்கள்.

ஈ: 62% வெள்ளையரது கருத்துப்படி கறுப்பர்கள் தாங்களாக உழைத்து உண்ணாத சோம்பேறிகள், சமூகக் கொடுப்பனவுகளில் காலம் தள்ளுபவர்கள்

அமெரிக்காவில் பெரும்பான்மையினர் கறுப்பர்களை (ஆபிரிக்க அமெரிக்கர்) மட்டமானவர், கீழானவர் என்றே கருதுகின்றனர். முக்கியமாக சமூகநலத்

www.tamilarangam.net



திட்டங்களை எதிர்ப்பவர்களே (முக்கியமாக முதலாளிகள்) தீவிர நிறவாதிகளாக உள்ளனர்.

20 வருடங்களுக்கு முன் எடுத்த கணிப்பீடு ஒன்றில் 55%க்கும் குறைவான வெள்ளையர்களே தமது அயலவராக கறுப்பர்கள் இருக்கலாம் எனக் கூறியிருந்தனர். தற்போது 80% வெள்ளையர்கள் இதே கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவில் கறுப்பின மக்களுடைய சராசரி வாழ்வுக்காலம், ஏனைய சமூகத்தினர் அனைவரையும்விடக் குறைவாகவே உள்ளது. ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் கறுப்பர்கள் மத்தியில் வேலையற்றோர் தொகை மிக அதிகமாக உள்ளது.●

## 52*

சற்றே விலகி
நந்தி வழி விட்டதுபோல்
வெலிக்கடையின் சிறைக்கூட
இருப்பு நெடுங்கதவம்
தானே திறக்கும்
அங்கே
காவலர்கள் அறியாமல்
கற்சுவர்கள் சூழ்கின்ற
அறைகட்குள் கொலை நடக்கும்

பகுத்தறிவு ஆளுகிற
புதிய யுகம்
அற்புதங்கள்
ஒருக்காலோ நடத்தாலோ
ஒப்பார்கள் என்பதனால்
இருகால் நடந்தேறும்
கண்டு அலுத்த
கற்சுவரோ மௌனிக்கும்.

சி. சிவசேகரம்

## கலைக்கனவுகள்'93

நோர்வேயில் இருந்து முதல் தடவையாக தமிழ் வீடியோ சஞ்சிகை ஒன்று 'கலைக்கனவுகள்' என்ற பெயரில் வெளியாகியுள்ளது. ஒஸ்லோ கலைக்கழகத்தின் வெளியீடான இந்த வீடியோ சஞ்சிகைக்கான இசை: வே.இரவிகுமார், ஒளிப்பதிவும் தொகுப்பும்: ரஞ்சன் (எஸ்வீயெஸ்) – தமயந்தி, ஒலிச்சேர்க்கை: மு.முரளிதரன் – க.நடராஜன். எழுத்தோவியம்: ச.சுகுமார் – சி.பிரேம்ராஜ்

தனிப்பிரதி ஒன்றின் விலை (தபாற்செலவு உட்பட) 20 (யு.எஸ்) டொலர்கள்.

தொடர்புகள்: Oslo Kalaikkalagam/ c/o. V.Ravikumar/ Sandakerv. 11, Oppg 1, Leil.112/ 0478 Oslo/ Norway.

www.tamilarangam.net

# இப்படி ஒரு நாள்

ஸ்ரீகஜன்.

அதிகமாக அவன்
பேசியதேயில்லைத்தான்
அன்று ஏனோ
உரத்துப் பேசினான்.
'மாணவர்களுக்குச் சுதந்திரம் வேண்டும்'
காற்று மெல்ல அசைவதை நிறுத்தி
அழகான தமிழைக் கேட்டது.
கூட்டம் கூட்டமாய் பூக்களின் காதில்
குசுகுசுத்து மேலே போனது.
முதுகோடு முகிலுரச
மலைநாட்டில்
நாங்கள் இருந்தோம்.
முகப்புப் போர்வையை இழுத்துமூடி
அடித்த பாம்பாய் செத்தும் கிடந்தோம்.
நீங்கள் மட்டும் எழுந்து நடந்தீர்
மாணவர்மீது கைவையாதே!
அசுரத் தலைகள்
அசந்துபோனது.
சூரியன் கதிரால் எட்டி எறிந்த
சுடுபுண்
எங்கள் கதவில்.

நேற்றைய பொழுது
வானம் பொய்த்து
பூமி பார்த்தது.
சிதறிய பற்றரிக் காபன் கட்டைபோல்
அநாதைப் பிணமென நீயும் கிடந்தாய்
ஆயிரம் கண்கள் கடந்துபோக
அமைதியாகச் செத்துக் கிடந்தாய்.
அறுந்துபோன பல்லி வாலில்
இதயம் கட்டி
வாழ்ந்து வந்தோம்.

நாங்கள் இன்னும்
சாகவில்லை.
நாங்கள் இன்னும்
சாகவேயில்லை.

லோவத்தன்னன்* நிலத்துள் வெடித்தது.
முஷ்டி உயர்த்தி
உயிர்ப்பும் கொண்டது.
இப்படி ஒருநாள்
நாங்கள் வருவோம்.
புழுதி மறைந்து பெருவெளி கடக்கையில்
அவிழ்ந்து கொட்டிய நெற்கனிச் சிதறலாய்
அசுரத் தலைகள்
கொய்து கிடக்கும்
இப்படி ஒருநாள்
நாங்களும் வருவோம்.



- மாணவ தலைவன் விமலேஸ்வரன் நினைவாக -
*லோவத்தன்னன் - நோர்வேயில் மலரும் ஒருவகைப் பூவினம்.

www.tamilarangam.net

# ஒரு அறிக்கையின் பின்னால்....

**சாள்ஸ்**

அண்மையில் சுவீடனில் சோஷியல் டெமோக்கிறட்டிக் கட்சியினால் நியமிக்கப்பட்ட, எதிர்காலத்தில் அரசியற் தஞ்சம் கோரி சுவீடன் வருவோரை எங்ஙனம் கையாளவேண்டும் என்பதை ஆராய்வதற்கான உயர்மட்டக்குழு "சுவீடனின் இன்றைய பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு இங்கு குடியேற வரும் வெளிநாட்டினரின் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும்" என்று பரிந்துரை செய்துள்ளது.

சுவீடன் தொழிற்சங்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான லெய்வ் புளொம்பொர்க் (Leif Blomberg) தலைமையிலான இக்குழு, இதுபற்றிய தனது பரிந்துரைகளையும் செய்துள்ளது.

அரசியற் தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள், இந்த அறிக்கையின்படி, மேன்முறையீடு செய்யும் பட்சத்தில், அவர்களது தாய்நாட்டுக்குச் சென்று முடிவு வரும்வரை காத்திருக்க வேண்டப்படலாம்.

சுவீடனில் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டவர்கள், தற்போது தமது நெருங்கிய உறவினர்கள் சிலரையும் இங்கு அழைக்கக்கூடியதாக அமைந்திருக்கும் சட்டத்தை மாற்றி, மிக நெருங்கிய உறவினர்களை மாத்திரமே (கணவன், மனைவி, 18வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள்) அழைக்கக்கூடியவாறு சட்டத்தை மாற்றுமாறு பரிந்துரை செய்துள்ள இக்குழு, கடந்த வருடம் சுவீடனில் வழங்கப்பட்ட 30,000 குடியிருப்பு அனுமதிகளில் 25,000 உறவினர்களுக்காக வழங்கப் பட்டுள்ளதென்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

யூகோஸ்லாவியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் தமது நாட்டில் போர் முடியும்வரை (மாத்திரமே) சுவீடனில் தங்க அனுமதி வழங்கப்படலாம் எனக் கூறியுள்ளது.

தற்போது அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதிகளது சுவீடிஷ் மொழிக் கல்வியின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்துள்ளதுடன், தற்போது அகதிமுகாம்களில் அகதிகளைக் கையாளும் முறையை மனிதாபிமானம் அற்றதெனக் கடுமையாக விமர்சித்துள்ளது.

அண்மைக்கால அபிப்பிராய வாக்கெடுப்புகளில் தனித்தே ஆட்சி அமைக்கக்கூடிய ஆதரவை சோஷியல் டெமோக்கிறட்டிக் கட்சி காட்டும் நிலையில், அக்கட்சியினால் நியமிக்கப்பட்ட இக்குழுவினது பரிந்துரைகள் புறக்கணிக்கத் தக்கதல்ல.

## உலகமும் யுத்தங்களும்

*ஸ்டொக்ஹோமில் அமைந்துள்ள அமைதி ஆராய்ச்சி நிலையம் (SIPRI) தனது கடந்த வருடத்திற்கான அறிக்கையில் உலகில் 30 போர்கள் நிகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளது. இதில் இந்திய – பாகிஸ்தானிய எல்லைப் போர் தவிர்த்து அனைத்தும் உள்நாட்டு யுத்தங்களாகும்.*

*ஆயுதந் தாங்கிய போர்களின் ஆபத்துக் குறைந்துவரும் அதேசமயம் உலகில் இரசாயன ஆயுதங்களின் ஆபத்து அதிகரித்துள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளது 'சிப்றி'.*

*உலகின் ஆயுதச் சந்தையில் 50% ஆயுதங்களை விற்பது அமெரிக்காவாகும். ஆயுதங்களை வாங்கும் நாடுகளில் முக்கியமானவை துருக்கி, இந்தியா, ஜப்பான் என்கிறது அறிக்கை.*


*சாள்ஸ்*

www.tamilarangam.net

## அதிக முதியோர்

சமீபத்தில் அமெரிக்க நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின்படி சுவீடனின் சனத்தொகையில் 18வீதம்பேர் 65வயதுக்கு மேற்பட்டோர் எனத் தெரியவருகிறது. இந்த அறிக்கைக்காக நடத்தப்பட்ட கணிப்பின்படி உலகிலேயே 65வயதுக்கு மேற்பட்டோர் அதிகம் வாழும் நாடு சுவீடன்தான். ஐரோப்பிய நாடுகளில் சராசரியாக 14%பேர் 65 வயதுக்கு மேற்பட்டோர். அமெரிக்கா, ஜப்பானில் 13% பேர் 65 வயதுக்கு மேற்பட்டோர். ஆசிய நாடுகளில் சராசரியாக சனத்தொகையின் 4.8%உம், ஆபிரிக்க நாடுகளில் சராசரியாக 2.7%உம் 65 வயதுக்கு மேற்பட்டோராவர்.

சாள்ஸ்.ஜெ.போமன்



POKKER! Hatten min!

கடந்த வருட இறுதியில் அரசியல் அகதிகளுக்கான தகுதி மறுக்கப்பட்டு ரூமேனியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அன்கா ரெய்சானு என்ற பெயருடைய சிறுமியும் அவளுடைய பெற்றோரும் சுவீடனுக்குத் திரும்பிவர சுவீடனின் குடிவரவுக் காரியாலயம் அனுமதி வழங்கியதையடுத்து, அவர்கள் ஏப்ரல் எட்டாம் திகதி அவர்கள் நாடு திரும்பினர். தீர்க்கமுடியாத ஒரு நோயால் (Retts syndrom) அந்தச் சிறுமி பாதிக்கப் பட்டதுடன், அவளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை ரூமேனியாவில் பெற முடியாது என்பதாலேயே அவள் திரும்பிவர அனுமதிக்கப் பட்டதாக சுவீடன் அரசு அறிவித்தது. ஆனால் இச்சிறுமியின் நிலைமை பற்றிப் பத்திரிகைகள் அண்மைக் காலத்தில் கடுமையாக விமர்சித்ததாலேயே, குடிவரவுக் காரியாலயம் இந்த முடிவை எடுத்திருப்பதாக நம்பப் படுகிறது.

## பெரியது கேட்பின்......

உலகில் தற்போது சனத்தொகை அடிப்படையில் பெரிய நகரமாக டோக்கியோ விளங்குகிறது. ஐ.நா. கணிப்பு ஒன்றின்படி தற்போது டோக்கியோவின் சனத்தொகை இரண்டு கோடியே 58லட்சம்.

அடுத்த இடத்தில் வருவது சாவோ பாலோ (பிரேசில்). இதன்சனத்தொகை ஒருகோடியே 92லட்சம். நியூயோர்க் மூன்றாவது இடத்தையும் (ஒருகோடி 62லட்சம்), இருவருடங்கள் முன்னதாக முதலிடத்தில் இருந்த மெக்சிக்கோ நகர் நான்காவது இடத்தையும் (ஒருகோடி 53லட்சம்), சீன நகர் ஷங்காய் ஐந்தாவது இடத்தையும் (ஒருகோடி 41லட்சம்) பெறுகின்றன.

– சங்கான் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

